போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 27, 1923.

நெ. 4(2)] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ பெப்ரவரி ௴ 27௳. [விலை, 1 அ. 6 பை.

சென்னை கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS.

சட்ட திட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின்
ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

சென்னைச் சட்டநிருபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் அதன் பகுதிகளைப்பற்றிய குறிப்புகளும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகின்றன :—

No. 3 of 1923.

1923-ம் ௵த்து 3-ம் நெ.

A BILL TO AMEND THE MADRAS LOCAL BOARDS ACT, 1920.

1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

பீடிகை.

1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்காக இந்தியா கவர்ன்மென்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 80-A பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1. இந்த ஆக்டை, 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகள் (திருத்த) ஆக்ட் என்று சொல்லலாம்.

2. (இதில் பின்னால் 'ஷை ஆக்ட்' என்று குறிப்பிடப்படும்) 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் 3-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(i) (6) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும் :—

"(6) 'கம்பெனி' என்பது - 1913-ம் ௵த்திய இந்துதேசத்து கம்பெனிகளைக் குறித்த ஆக்டில் அர்த்தம் சொல்லியுள்ளபடியிருக்கிற, அல்லது பார்லிமென்ட் சபையாரால்

செய்யப்பட்ட யாதொரு ஆக்டையாகிலும் ராயல் சார்ட்டர் அல்லது லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகார பத்திரத்தையாகிலும் யாதொரு பரிடிஷ் ராஜ்ஜியத்திலுள்ள சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட யாதொரு ஆக்டையாகிலும் அனுசரித்து ஏற்படுத்தப்பட்டிருக்கிற யாதொரு கம்பெனியென்று அர்த்தமாவதுமல்லாமல், சட்டப்படி சேர்ந்ததாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி அதனுடைய பிரதான வியாபார ஸ்தலம் ப்ரிடிஷ் இந்தியாவில் இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, ப்ரிடிஷ் இந்தியாவில் வியாபாரம் செய்கிற அன்னியர்கள் சேர்ந்த எந்தக் கூட்டத்தை போர்ட் ஆவ் இன்லண்ட் ரெவினியு என்னும் உள்நாட்டு வருமான சம்பந்தமான சபையார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவுமூலமாய் 1922-ம் ௵த்திய இந்துதேசத்து வருமானவரி ஆக்டின் காரியங்களுக்காக ஒரு கம்பெனியென்று நிர்ணயிக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு கூட்டம் என்பதும் அதில் அடங்கும்."

(ii) (19) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட உட்பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"(19-A) 'ரெவினியு தாலூகா' என்பது - ரெவெனியு பரிபாலனசம்பந்தமான காரியங்களுக்காக தாலூகாவாகப் பிரதேச கவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்பட்ட விஸ்தீர்ணத்தின் எந்த பாகமாகிலும் சென்னை ராஜதானிப்பட்டணத்திலாவது 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு மியுனிஸிபாலிடியிலாவது அடங்கியிருந்தால், அந்த பாகம் நீங்கலாக ஷை விஸ்தீர்ணம் என்று அர்த்தமாகும்."

3. ஷை ஆக்ட் 8-வது பிரிவுடன் அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"ஆனால், தாலூகா போர்ட் ப்ரெஸிடென்டாகத் தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட யாதொரு நபர் டிஸ்ட்ரிக்ட் போர்டில் மெம்பர் ஸ்தானம் பெற 55-வது பிரிவின்படி யோக்கியதையற்றவராயிருந்தாலும், 56-வது பிரிவைச் சேர்ந்த (1) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் யோக்கியதைக்குறைவுகளில் எதற்காவது உட்பட்டவராய்விட்டாலும், டிஸ்ட்ரிக்ட் போர்டில் அந்த தாலூகா போர்ட் ப்ரெஸிடென்டுக்கு உத்தியோக முறைமையில் ஏற்பட்டிருக்கும் ஸ்தானமானது - அந்த யோக்கியதைக் குறைவு இருந்து வருகிறவரையில் காலியாகவே இருந்துவரவேண்டும்."

4. ஷை ஆக்ட் 9-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில், 'மெம்பராயிருக்கும் ஒருவர் கவர்ன்மென்டாரின்கீழ் சம்பளமுள்ள கிராம பெரியதனக்காரரின் உத்தியோகமல்லாமல் வேறே யாதொரு உத்தியோகத்தை வகித்துக்கொண்டிராவிட்டால், அவர்' என்னும வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'மெம்பராயிருப்பவர்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

5. ஷை ஆக்ட் 10-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அம்மாதிரியாகவே' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'இதற்கென்றே பிரத்தியேகமாய்க் கூட்டப்பட்ட ஒரு சபைக்கு வந்திருக்கும் மெம்பர்களில் முக்கால் பங்கு பேருக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

6. ஷை ஆக்ட் 16-வது பிரிவின் கடைசியில், அடியிற்கண்ட வாக்கியத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"அப்படிப்பட்ட ராஜினாமாவானது - யாதொரு லோகல் போர்ட் மெம்பர் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டின் விஷயத்தில் அது ப்ரெஸிடென்டால் வரப்பெற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்தும், ப்ரெஸிடென்டின் விஷயத்தில் அது லோகல் போர்டுக்குமுன் வைக்கப்படும் தேதியிலிருந்தும் செலாவணியாகும்."

7. ஷை ஆக்ட் 18-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டின் ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் ஆகிய இருவருடைய உத்தியோகங்களும் காலியாயிருந்தால்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டின் உத்தியோகம் காலியாயிருந்து, வைஸ் ப்ரெஸிடென்ட் ஒருவர் இராவிட்டாலும், வைஸ் ப்ரெஸிடென்டானவர் ஊரில் இல்லாமற் போய்விட்டாலும் (வேலை பார்க்க) சக்தியற்றவராய்விட்டாலும்,' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (3) குறிப்பிட்ட உட்பிரிவில், 'யாதொரு தாலூகா போர்டின் ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் ஆகிய இருவருடைய உத்தியோகங்களும் காலியாயிருந்தால்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'யாதொரு தாலூகா போர்ட் ப்ரெஸிடென்டின் உத்தியோகம் காலியாயிருந்து, வைஸ் ப்ரெஸிடென்ட் ஒருவர் இராவிட்டாலும், வைஸ் ப்ரெஸிடென்டானவர் ஊரில் இல்லாமற் போய்விட்டாலும் (வேலை பார்க்க) சக்தியற்றவராய்விட்டாலும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளில், 'ப்ரெஸிடென்டாவது வைஸ் ப்ரெஸிடென்டாவது' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'ப்ரெஸிடென்ட்' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(d) (4) குறிப்பிட்ட உட்பிரிவில், 'உத்தியோகம் காலியானால்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'உத்தியோகம் காலியாய்விட்டாலும், யூனியன் போர்டின் ப்ரெஸிடென்ட் ஊரில் இல்லாமற் போய்விட்டாலும் (வேலை பார்க்க) சக்தியற்றவராய்விட்டாலும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

8. ஷை ஆக்ட் 23-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'ஊரில் இல்லாமற் போய்விட்டாலும்' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு '(வேலை பார்க்க) சக்தியற்றவராய்விட்டாலும்' என்னும் வார்த்தைகளைச அமைத்துக்கொள்ளவேண்டும்.

9. ஷை ஆக்ட் 28-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

"(1) யாதொரு லோகல் போர்டார்-தாங்கள் பிரித்துக்கொடுக்கக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தும் காரியத்துக்காகவாகிலும் கடமைகளைச் செய்யும் காரியத்துக்காகவாகிலும் அலுவல்களை நிறைவேற்றும் காரியத்துக்காகவாகிலும் கம்மிட்டிகளை ஏற்படுத்தலாம்; அல்லது, தனி மெம்பர்களையாவது கம்மிட்டிகளையாவது நியமித்து அவர்களுடைய அபிப்பிராயத்துக்குத் தாங்கள் அனுப்பக்கூடிய விஷயங்களைப்பற்றி விசாரணை செய்து ரிபோர்ட் செய்யும்படியோ ஆலோசனை சொல்லும்படியோ கேட்கலாம்."

(b) (3) குறிப்பிட்ட உட்பிரிவை விட்டுவிடவேண்டும்.

10. ஷை ஆக்ட் 29-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) முதல் வாக்கியத்தில், 'நிலையான கம்மிட்டியல்லாத வேறே' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

(b) இரண்டாவது வாக்கியத்தில், 'நபர்களின் சங்கியையானது' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு, 'பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியுடனன்றி மற்றப்படி' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

11. ஷை ஆக்ட் 30-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

"30 (1) யாதொரு லோகல்போர்டார்-எந்தக் காரியத்தில் தாங்களும் ஒரு பிரதேச அதிகார சபை அல்லது பல பிரதேச அதிகார சபைகளும் கூட்டாய் அக்கறையுடையவர்களாயிருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு காரியத்துக்காகவாகிலும் அவர்கள் கூட்டாக உத்தரவாதிகளாயிருக்கும் யாதொரு விஷயத்துக்காகவாகிலும் ஒரு கூட்டுக் கம்மிட்டி ஏற்படுத்துவதில் ஷை சபை அல்லது சபைகளுடன் சேரலாம்; மேலும், பிரதேச கவர்ன்மென்டார் உத்தரவு செய்கிறபட்சத்திலே, அப்படியே சேரவேண்டும்.

(2) சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளின் மெம்பர்களாயிராவிட்டாலும், யாதொரு கூட்டுக் கம்மிட்டியில் வேலை பார்ப்பதற்கு விசேஷ யோக்கியதாம்சங்கள் உடையவர்களென்று ஷை சபையார் அபிப்பிராயப்படக்கூடிய நபர்கள் அந்தக் கம்மிட்டியில் சேர்ந்திருக்கலாம்; ஆனால், அப்படிப்பட்ட நபர்களின் சங்கியையானது பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியுடனன்றி மற்றப்படி, கூட்டுக் கம்மிட்டியிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாயிருக்கக்கூடாது.

(3) யாதொரு கூட்டுக் கம்மிட்டியானது ரெகுலேஷன்கள் மூலமாய் ஏற்படுத்தப்படவேண்டும்; அந்த ரெகுலேஷன்கள் - கடைசி உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற விஷயத்திலன்றி மற்றப்படி, சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகள் ஒவ்வொன்றினாலும் ஒப்புக்கொள்ளப்பட்டாலொழிய செலாவணியாகமாட்டா.

(4) ஷை ரெகுலேஷன்களில் அடியிற்கண்ட விஷயங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும்:—

(a) கூட்டுக் கம்மிட்டியைச் சேர்ந்த மெம்பர்களின் மொத்த சங்கியை இன்னதென்பது;

(b) இத்தனை பேர் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளின் மெம்பர்களாயிருக்கவேண்டுமென்பதும் இத்தனை பேர் வெளியாராயிருக்கலாமென்பதும்;

(c) இன்ன நபர்கள் கூட்டுக் கம்மிட்டியின் மெம்பர்களாயிருக்கவேண்டுமென்பது அல்லது அவர்கள் இன்ன விதமாய் நியமிக்கப்படவேண்டும் அல்லது தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்பது;

(d) இன்ன நபர் கூட்டுக் கம்மிட்டியின் அக்கிராசனாதிபதியாயிருக்கவேண்டுமென்பது அல்லது அவர் இன்ன விதமாய் நியமிக்கப்படவேண்டும் அல்லது தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்பது;

(e) மெம்பர்கள் அக்கிராசனாதிபதி ஆகிய இவர்களின் உத்தியோக கால அளவு இன்னதென்பது ;

(f) சம்பந்தப்பட்ட ஒரு அதிகார சபையாவது பல அதிகார சபைகளாவது செலுத்தக்கூடியவையாயுள்ள அதிகாரங்களில், இன்ன அதிகாரங்களைக் கூட்டுக் கம்மிட்டியார் செலுத்தலாமென்பது ;

(g) அப்படிப்பட்ட கம்மிட்டிகளின் நடவடிக்கைமுறை இன்னதென்பது.

(5) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட ரெகுலேஷன்களை மாற்றவாவது ரத்துசெய்யவாவது சம்பந்தப்பட்ட சகல அதிகார சபைகளும் சம்மதிக்கிறபட்சத்தில் அந்தப்படியே மாற்றலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

(6) இந்தப் பிரிவின் முந்திய நிபந்தனைகளில் எதன்படியாவது பிரதேச அதிகார சபைகளுக்குள் அபிப்பிராயபேதம் ஏதாவது உண்டானால், அது விஷயத்தைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்பவேண்டும் ; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

(7) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரதேச கவர்ன்மெண்டார் நடவடிக்கை நடத்தினால், அவர்கள் - (4) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் சகல விஷயங்கள் சம்பந்தமாகவாவது அவைகளில் எதன் சம்பந்தமாகவாவது தங்களுக்கு அவசியமாகவாகிலும் உசிதமாகவாகிலும் தோற்றும் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.''

12. ஷை ஆக்ட் 31-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) 'ரெகுலேஷன்களை' என்னும் வார்த்தைக்கு முன்னுள்ள 'உடன்சேர்க்கையான' என்னும் வார்த்தையை விட்டுவிடவேண்டும்.

(b) (c) குறிப்பிட்ட பகுதிக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

''(c) சபைகளில் ஒழுங்கு தவறாதிருக்கும்படி பார்த்துக்கொள்வதும் சபையில் நடவடிக்கைகள் நடத்துவதும், ஒழுங்கு சம்பந்தமான விஷயங்களைக்குறித்து தங்களுடைய தீர்மானங்களைச் செலாவணியாகச் செய்யும் காரியத்துக்காக ப்ரெஸிடென்டுகள் செலுத்தக்கூடிய அதிகாரங்களும்.''

(c) (e) குறிப்பிட்ட பகுதிக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துகொள்ள வேண்டும் :—

'' (e) ரிபோர்ட்செய்வதற்கும் ஆலோசனை சொல்வதற்குமான கம்மிட்டிகளைத் தவிர இதர கம்மிட்டிகளை ஏற்படுத்துவதும், அந்தக் கம்மிட்டிகளின் நடவடிக்கை முறைக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் நிச்சயிப்பதும்.''

(d) (e) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியைச் சேர்த்துக் கொண்டு, ஏற்கனவேயுள்ள (f), (g) குறிப்பிட்டிருக்கும் பகுதிகளுக்கு முறையே (g), (h) என்று குறிப்பிடவேண்டும் :—

''(f) அதிகாரங்கள், கடமைகள் அல்லது அலுவல்களை —

(i) ப்ரெஸிடென்ட், லோகல் போர்டின் யாதொரு மெம்பர், லோகல் போர்டைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் அல்லது யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தருக்காவது,

(ii) (e) குறிப்பிட்ட பகுதியின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு கம்மிட்டியாருக்காவது அதன் அக்கிராசனாதிபதிக்காவது

பிரித்துக்கொடுப்பதும்.''

13. ஷை ஆக்ட் 35-வது பிரிவில், 'உத்தியோகத்தில் இருப்பதற்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'உத்தியோகத்தை வகிப்பதற்காயினும் அதில் இருந்து வருவதற்காயினும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

14. ஷை ஆக்ட் 36-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

'' 36. (1) ஒவ்வொரு யூனியன் போர்டாரும் தாலூகா போர்டாரும் தங்களுடைய பரிபாலனத்தைக் குறித்து டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டுக்கு ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டும் ; யூனியன் போர்டாரின் ரிபோர்ட்டை சம்பந்தப்பட்ட தாலூகா போர்ட் ப்ரெஸிடென்ட் மூலமாய் அனுப்பவேண்டும்.

(2) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரும் - ஜில்லாவிலுள்ள சகல லோகல் போர்டுகளின் பரிபாலனத்தைக்குறித்தும் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டும்.

(3) ஷை ரிபோர்ட்டுகள் (பைனான்ஷியல்) அரசிறை வருஷத்துக்குச் சம்பந்தப்பட்டவைகளாயிருக்கவேண்டும்; மேலும், அரசிறை வருஷத்துக்குப் பிறகு வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதிக்குப் பிறகு கூடுமான சீக்கிரத்திலும் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய தேதிக்கு மேற்படாமலும் அந்த ரிபோர்ட்டுகளை அனுப்பவேண்டும்; அன்றியும், அவை பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனைப்படி இருக்கவேண்டியதுமல்லாமல், அவைகளில் அவர்களால் நிர்ணயிக்கப்படக்கூடிய விவரங்கள் அடங்கியிருக்கவும் வேண்டும்.

(4) ஒவ்வொரு லோகல் போர்டாரும் அனுப்பவேண்டிய ரிபோர்ட்டை ப்ரெஸிடெண்ட் தயார் செய்யவேண்டும்; லோகல் போர்டார் - அந்த ரிபோர்ட்டைக்குறித்து ஆலோசனை பண்ணி, அதன்மேல் தாங்கள் தீர்மானம் ஏதேனும் செய்தால், அந்தத் தீர்மானம் சகிதமாய் அதை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பவேண்டும்.

(5) பிரதேச கவர்ன்மெண்டாரால் கட்டளையிடப்படக்கூடிய விதமாய் அந்த ரிபோர்டைப பிரசுரஞ்செய்யவேண்டும்.''

15. ஷை ஆக்ட் 47-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

'47. (1) உத்தியோக முறைமையில் இருக்கும் மெம்பர்களும் பிரதேச கவர்ன்மெண்டாரால நியமிக்கப்படும் மெம்பர்களுமல்லாமல், யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டைச் சேர்ந்த இதர மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் காரியங்களுக்காக, டிஸ்ட்ரிக்ட் போர்டின் விசாரணை அதிகாரத்துக்குள் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு ரெவினியு தாலூகாவும் தெரிந்தெடுப்பவர்களின் பிரத்தியேகமான தொகுதியாயிருக்கும்.

(2) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரும் - ஒவ்வொரு ரெவினியு தாலூகாவும் தெரிந்தெடுத்து அனுப்பக்கூடிய மெம்பர்களின் சங்கியையைத் தீர்மானமூலமாகவும் பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தின்மேலும் நிச்சயிக்கவேண்டும்.

(3) (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட மெம்பர்களாயிராமல், நீலகிரி டிஸ்ட்ரிக்ட் போர்டைச்சேர்ந்த இதர மெம்பர்கள் நிர்ணயிக்கப்படக்கூடிய யோக்கியதாம்சங்கள் பெற்றுள்ள நபர்களாலும் நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாகவும் தெரிந்தெடுக்கப்படவேண்டும :

ஆனல், யாதொரு ரெவினியு தாலூகா தெரிந்தெடுத்தனுப்பவேண்டிய மெம்பர்களின் சங்கியை மாற்றப்பட்டாலும், புதிதாய் ஒரு ரெவினியு தாலூகா ஏற்படுத்தப்பட்டாலும், டிஸ்ட்ரிக்ட் போர்டார் - உத்தியோக முறைமையில் இருக்கும் மெம்பரைத் தவிர அப்போது போர்டில் இருக்கிற தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மெம்பரும் இன்ன ரெவினியு தாலூகாவின் பிரதிநிதியாகக் கருதப்படுவாரென்பதையும், டிஸ்ட்ரிக்ட் போர்டிலுள்ள காலிஸ்தானங்களைப் பூர்த்திசெய்வதற்காக இன்ன ரெவினியு தாலூகா அல்லது ரெவினியு தாலூகாக்களில் எலெக்ஷன்கள் நடத்தவேண்டுமென்பதையும் நிச்சயிக்கவேண்டும்.''

16. ஷை ஆக்ட் 48-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) குறிப்பிட்ட பகுதியில், 'அந்தப் பிரதேச விஸ்தீர்ணத்தை' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அந்தப் பிரதேச விஸ்தீர்ணத்திலுள்ள ரெவினியு தாலூகாக்களில் ஒவ்வொன்றையும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) ஷை பிரிவின் கடைசியில் அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் :—

"ஆனல், யாதொரு ஸர்க்கில் (வட்டம்) தெரிந்தெடுத்து அனுப்பவேண்டிய மெம்பர்களின சங்கியை மாற்றப்பட்டாலும், புதிதாய் யாதொரு ஸர்க்கில் ஏற்படுத்தப்பட்டாலும், தாலூகா போர்டார் - அப்போது பிரஸ்தாப போர்டிலிருக்கிற தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மெம்பரும் இன்ன ஸர்க்கிலுக்குப் பிரதிநிதியாயிருப்பதாகக் கருதப்படவேண்டுமென்பதையும், தாலூகா போர்டிலுள்ள காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்வதற்காக இன்ன ஸர்க்கில் அல்லது ஸர்க்கில்களில் எலெக்ஷன்கள் நடத்தவேண்டுமென்பதையும் நிச்சயிக்கவேண்டும்."

17. ஷை ஆக்ட் 49-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"ஆனல், யாதொரு வார்ட் தெரிந்தெடுத்து அனுப்பவேண்டிய மெம்பர்களின் சங்கியை மாற்றப்பட்டாலும், யாதொரு வார்ட் புதிதாய் ஏற்படுத்தப்பட்டாலும், யூனியன் போர்டார் - அப்போது பிரஸ்தாப போர்டிலிருக்கிற தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மெம்பரும் இன்ன வார்டுக்குப் பிரதிநிதியாயிருப்பதாகக் கருதப்படவேண்டுமென்பதையும், யூனியன் போர்டிலுள்ள காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்வதற்காக இன்னவார்ட் அல்லது வார்டுகளில் எலெக்ஷன்கள் நடத்தவேண்டுமென்பதையும் நிச்சயிக்கவேண்டும்."

18. ஷை ஆக்ட் 51-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'ஒவ்வொரு தாலூகா போர்டுக்காகவும் யூனியன் போர்டுக்காகவும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'ஒவ்வொரு ரெவினியு தாலூகாவுக்காகவும் ஒவ்வொரு யூனியன் போர்டுக்காகவும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (3) குறிப்பிட்ட உட்பிரிவில், 'யாதொரு தாலூகா போர்டுக்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'யாதொரு ரெவினியு தாலூகாவுக்கு' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

19. ஷை ஆக்ட் 52-வது பிரிவைச் சேர்ந்த (e) குறிப்பிட்ட பகுதியில், 'தாலூகா போர்ட் அல்லது யூனியன் விஸ்தீர்ணத்திலாவது' என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக 'ரெவினியு தாலூகா அல்லது யூனியனிலாவது' என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

20. ஷை ஆக்ட் 54-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'யாதொரு தாலூகா போர்ட் அல்லது யூனியன் போர்டுக்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'யாதொரு ரெவினியு தாலூகா அல்லது யூனியனுக்கு' என்னும் வார்த்தைகளையும், 'ஷை தாலூகா போர்ட் அல்லது யூனியன் போர்டின்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'ஷை லோகல் போர்டின்' என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த விலக்கு நிபந்தனைக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"மேலும், யாதொரு நபர் கவர்ன்மென்டைச் சேர்ந்த சம்பளம் பெறும் உத்தியோகஸ்தரா இல்லையா என்பதைப்பற்றி யாதொரு பிரசினை ஏற்பட்டால், அது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டாரின் தீர்மானம் முடிவானதாகும்."

21. ஷை ஆக்ட் 55-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (i) இப்போதிருக்கும் (i) முதல் (vi) வரையிலுள்ள பகுதிகளுக்கு (a) முதல் (f) வரையிலுள்ள பகுதிகளாக அடையாளமிட்டு, அந்தப்படி (c), (d) என்று அடையாளமிட்ட பகுதிகளுக்கு இடையில் இப்போதிருக்கும் விலக்கு நிபந்தனை முழுவதையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) அந்தப்படி (c) என்று அடையாள மிட்ட பகுதியில், 'லோகல் போர்டாரோடு' என்னும் வார்த்தைகளுக்குமுன் 'ஜில்லாவிலுள்ள யாதொரு' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) அந்தப்படி (d) என்று அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"ஆனால், யாதொரு நபர் ஹானரெரி மாஜிஸ்ட்ரேட் உத்தியோகத்தை ராஜிநாமா செய்திருந்து அந்த ராஜிநாமாவானது நேமக தேதிக்குமுன் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டின் ஆபிஸில் வந்து சேர்ந்திருந்தால், அவர் யாதொரு எலெக்ஷனில் அபேக்ஷகராய் நேமகம் செய்யப்படுவதற்கு யோக்கியதை பெற்றவராயிருப்பதாகக் கருதப்படும்."

22. ஷை ஆக்ட் 56-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (d) அடையாளமிட்ட பகுதியில், 'உட்பிரிவிற்கண்ட' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு '(c) அடையாளமிட்ட பகுதியைச் சேர்ந்த' என்னும் எழுத்தையும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (e) அடையாளமிட்ட பகுதியில், '(iv)' என்னும் இலக்கத்துக்கும் நகவளைவுக்குறிகளுக்கும் பர்த்தியாக '(d)' என்னும் எழுத்தையும் நகவளைவுக்குறிகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (g) அடையாளமிட்ட பகுதியில், 'எந்த விஸ்தீர்ணத்தின் விஷயமாய் லோகல் போர்டாருக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்திலாவது' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'சந்தர்ப்பத்துக்கேற்றபடி ரெவினியு தாலூகா அல்லது யூனியனிலாவது' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(d) (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b) அடையாளமிட்ட பகுதியில், 'தொடர்ச்சியாய் மூன்று மாதங்களாக லோகல் போர்டின்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'தொடர்ச்சியாய் லோகல் போர்டின் மூன்று' என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

(e) (4) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அது விஷயத்தை லோகல் போர்டின் அடுத்த சபையில் ப்ரெஸிடென்ட் தெரிவிக்கவேண்டும்; லோகல் போர்டார் - அந்த நபரை அந்த சபையிலே மெம்பராக மறுபடியும் சேர்த்துக்கொள்ளலாம்.' என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக 'அவர் - தாம் மெம்பராயிருப்பது நின்றுபோனதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் தாம் மறுபடியும் மெம்பராய்ச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டால், லோகல் போர்டார் - அந்த விண்ணப்பம் வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அடுத்து வரும் போர்டின் சபையில் அவரை மறுபடியும் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளலாம்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(f) (4) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

"(5) உத்தியோக முறைமையில் மெம்பராயிராத யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டின் வேறே மெம்பரானவர் ஜில்லாவிலுள்ள தாலூகா போர்டுகள் எதிலேனும் மெம்பராய்விட்டால், அவர் - டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர் உத்தியோகம் வகிப்பதினின்றும் நீங்கினவராவார்; மேலும், யாதொரு தாலூகா போர்ட் மெம்பரானவர் - உத்தியோகமுறைமையில் அல்லாமல் மற்றப்படி. டிஸ்ட்ரிக்ட் போர்டின் மெம்பராய்விட்டால், அவர் - தாலூகா போர்ட் மெம்பர் உத்தியோகம் வகிப்பதினின்றும் நீங்கினவராவார்."

23. ஷை ஆக்ட் 60-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (a) குறிப்பிட்ட பகுதியில், 'இருந்தால்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'இருந்து, டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளாகவாவது தாலூகா பாட்டைகளாகவாவது தரம் பிரிக்கப்படாமலிருந்தால்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (b) குறிப்பிட்ட பகுதியில், 'யாதொரு தாலூகாவின ஹத்துக்களுக்குள்ளும் யாதொரு யூனியன் ஹத்துக்களுக்கு வெளியிலும் இருந்து டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளாகத் தரம் பிரிக்கப்படாமலிருந்தால்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'யாதொரு தாலூகாவின் ஹத்துக்களுக்குள் இருந்து தாலூகா பாட்டைகளாகத் தரம் பிரிக்கப்பட்டிருந்தால்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) (c) குறிப்பிட்ட பகுதியில், 'டிஸட்ரிக்டின் ஹத்துக்களுக்குள்ளும் யாதொரு யூனியன் ஹததுக்களுக்கு வெளியிலும் இருந்து' என்னும் வார்த்தைகளுக்கு பாத்தியாக, 'டிஸ்ட்ரிக்டின் ஹத்துக்குள் இருந்து' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

24. ஷை ஆக்ட் 67-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

"67. லோகல் போர்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களின் சங்கியையையும் உத்தியோகப்பெயர்களையும் அந்தஸ்துகளையும் அவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்கள், கட்டணங்கள், வர்த்தனைகள் ஆகிய இவைகளையும் நிஷ்கரிஷை செய்வதற்காவது மாற்றுவதற்காவது சம்பந்தப்பட்ட சகல பிரேரேபணைகளுக்கும் லோகல் போர்டாரின் அனுமதியைப் பெறவேண்டும்.

ஷை பிரேரேபணைகள் - ப்ரெஸிடென்ட் கேட்டுக்கொள்வதன்மேல் மாத்திரமே லோகல் போர்டாரால் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். மேலும், லோகல் போர்டார் - திருத்தங்களுடனாவது திருத்தங்களில்லாமலாவது அவைகளை ஜாரி செய்யலாம்."

25. ஷை ஆக்ட் 68-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'உத்தியோகத்தைத் தன் (சிப்பந்திப்)பட்டியில் சேர்க்கவேண்டும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'உத்தியோகத்துக்கு அனுமதி கொடுக்கவேண்டும்' என்னும் வார்த்தைகளையும், 'உத்தியோகத்தையும் அதில் சேர்க்கலாம்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'உத்தியோகத்துக்கும் அனுமதி கொடுக்கலாம்' என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) ஷை ஆக்ட் 68-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் எவரும் - டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் அனுமதியில்லாமல் வேறே யாதொரு தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரம் செய்யக்கூடாது."

26. ௸ ஆக்ட் 70-வது பிரிவில், ‘ சிப்பந்திப்பட்டியையும் ’ என்னும் வார்த்தையை விட்டுவிட்டு, ‘ விதிகளையும் ’ என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக ‘ விதிகளை ’ என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

27. ௸ ஆக்ட் 71-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (c) குறிப்பிட்ட பகுதியில், ‘ ஒழுங்கேற்படுத்துவதற்காகவும் ’ என்னும் வார்த்தைகளுக்குமுன் ‘ பிரயாண வர்த்தனை கொடுப்பதைக்குறித்தும் ’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (i) அடையாளமிட்ட விலக்கு நிபந்தனையில், ‘ ரஜா வர்த்தனையும் ’ என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு ‘ பிரயாண வர்த்தனையும் ’ என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேணடும்.

28. ௸ ஆக்ட் 75-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்டதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

“ இந்தப் பிரிவின்படியுள்ள யாதொரு தீர்மானம் குறித்த ஒரு வருஷத்துக்காக அமுலுக்கு வந்திருக்கும்போது, அப்படிப்பட்ட தீர்மானத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் வீதங்களையாவது தேதிகளையாவது அந்த வருஷம் சம்பந்தப்பட்டவரையில் மாற்றுவதற்கான எந்த பிரேரபணைகளையும், பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதி அல்லது அவர்களுடைய கட்டளையில்லாமல், டிஸ்ட்ரிக்ட் போர்டார் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.”

29. ௸ ஆக்ட் 76-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) ‘ ஸ்தலத்திற்கு ரெயில் மூலமாய் வருகிற அல்லது அதைவிட்டுப் போகிற ’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக ஸ்தலத்தை ‘ ரெயில் மூலமாய் விட்டுப் போகிற ’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) ‘ டிஸ்ட்ரிக்டிலுள்ள யாதொரு யாத்திரை ஸ்தலத்திற்கு ’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக ‘ யாத்திரைக்காரர்கள் போவதாய் டிஸ்ட்ரிக்டிலுள்ள யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்கு ’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) விலக்கு நிபந்தனையில், ‘ சீர்படுத்தும் ’ என்னும் வார்த்தைக்குமுன் ‘ யாத்திரைக்காரர்களின் தேகாரோக்கியம் அல்லது சௌக்கியத்துக்காக ஏற்பாடு செய்யும் அல்லது ’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

30. ௸ ஆக்ட் 92-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

“92. (1) யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் கம்பெனிகளுக்கு வரி விதிக்கப்படுமென்று டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டானவர் 77-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரித்தால், அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பிறகு அந்த விஸ்தீர்ணத்தில் யாதொரு அரை வருஷத்திலே மொத்தத்தில் 60 தினம் வியாபாரம் நடத்துகிற அல்லது நடத்தியிருக்கிற ஒவ்வொரு கம்பெனியாரும் - அந்தக் கம்பெனியார் ௸ விஸ்தீர்ணத்தில் நடத்தியிருக்கிற மொத்த வியாபார மதிப்பின்மேல் ௸ அரை வருஷத்துக்கு ஒரு வரி செலுத்தவேண்டும் :

ஆனால், எந்தக் கம்பெனிகளின் அரைவருஷ மொத்த வியாபார மதிப்பானது 5,000 ரூபாய்க்குக் குறைவாயிருக்கிறதோ அந்தக் கம்பெனிகளுக்கு கம்பெனி வரி விதிக்கக்கூடாது.

(2) ௸ வரியானது - 75-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிச்சயிக்கக்கூடிய மொத்த வியாபார மதிப்பில் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் இரண்டணாவுக்கு மேற்படாமல், அந்த வியாபார மதிப்பில் நூற்றுக்கு இவ்வளவென்று கணக்கிட்டு விதிக்கப்படவேண்டும்.

(3) ‘ மொத்த வியாபார மதிப்பு ’ என்பது - யாதொரு கம்பெனியாரால் விற்பனை செய்யப்பட்டாவது உண்டாக்கப்பட்டாவது தயார் செய்யப்பட்டாவதிருக்கும் சாமான்கள் அல்லது அவர்களால் செய்யப்பட்ட வேறே வியாபாரம் அல்லது வேலையின் மொத்த பணமதிப்பு என்று அர்த்தமாகும்.

(4) வசூலிக்கப்பட்ட ப்ரிமியம் தொகையானது யாதொரு இன்ஷூரன்ஸ் கம்பெனியின் விஷயத்தில் மொத்த வியாபார மதிப்பாயிருப்பதாகக் கருதப்படும்.

விவரணம்.—எஜென்ட் யாதொரு கம்பெனியாயிருந்தால், அந்த எஜென்ட் - பிரதான கம்பெனியின் மொத்த வியாபார மதிப்பாயிருக்கும் மதிப்பின் மேலேயே பிரத்தியேகமாய் கம்பெனி வரி விதிக்கப்படுவதற்கு உள்ளாகமாட்டார்.”

31. ௸ ஆக்ட் 93-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

“93 (1) யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் தொழில் வரி விதிக்கப்படுமென்று டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டானவர் 77-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரித்தால்,

அந்த விஸ்தீர்ணத்துக்குள்ளும் ஷை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பிறகும் யாதொரு நபர் யாதொரு அரை வருஷத்தில் மொத்தத்தில் அறுபது தினங்களுக்கு யாதொரு தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்தாலும் செய்திருந்தாலும், யாதொரு வியாபாரம் நடத்தினாலும் நடத்தியிருந்தாலும், அல்லது பணம் கடன் கொடுத்திருப்பதிலிருந்து ஏதாவது வரும்படி பெற்று யாதொரு அரை வருஷத்திலே மொத்தத்தில் அறுபது தினங்கள் ஷை விஸ்தீர்ணத்தில் வாசஞ்செய்தாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும்-4-வது ஷெட்யூலிற்கண்ட நிபந்தனைகளின்படி தம்முடைய வரும்படியின்மேல் அரை வருஷ வரி செலுத்தவேண்டும் :

ஆனால், ஸர்க்காரைச் சேர்ந்ததாகவோ ஸர்க்கார் சம்பந்தமில்லாததாகவோவுள்ள யாதொரு உத்தியோகம் வகிக்கிற அல்லது யாதொரு பென்ஷன் பெறுகிற அல்லது ஈடுகளின்மேல் போட்டுவைத்திருக்கும் பணத்திலிருந்து வரும்படி பெறுகிற யாதொரு நபர் - சந்தர்ப்பத்துக் கேற்றபடி தம்முடைய சம்பளத்தின்மேலாவது பென்ஷன் மேலாவது ஈடுகளின்மேல் போட்டுவைத்திருக்கும் பணத்திலிருந்து தமக்குக் கிடைக்கிற வரும்படியின் மேலாவது தொழில் வரி ஏதுவும் விதிக்கப்படுவதற்கு உள்ளாகமாட்டார்.

(2) யாதொரு நபர் (1) குறிப்பிட்ட உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட சகல ஆதாரங்களிலிருந்தும் தமக்குக் கிடைக்கிற மொத்த வரும்படிக்குப் பொருத்தமாயுள்ள வகுப்பின்படி வரிக்குள்ளாகத்தக்கவராவார்.

(3) யாதொரு நபர் சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள வேறே யாதொரு லோகல் போர்டிலாவது மியுனிஸிபாலிடியிலாவது கன்டோன்மென்டிலாவது அதே அரை வருஷத்துக்காக இந்த ஆக்டின்படியோ அல்லது 1919-ம்ஹூ த்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டின்படியோ 1920-ம்ஹூ த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படியோ விதிக்கப்பட்ட தொழில் வரிக்காகவாகிலும் 1910-ம்ஹூ த்திய இந்துதேசத்து கன்டோன்மென்டுகளாக்டின்படி விதிக்கப்பட்ட தொழில் வரியைப் போன்ற வேறே யாதொரு வரிக்காகவாகிலும் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தியிருப்பதாக ருஜு செய்தால், அவர் - வாசஸ்தலம் அல்லது வியாபார ஸ்தலம் மாறும் காரணத்தினாலேயே ஷை தொகைக்சம் இந்த ஆக்டின்படியாயினும் மேலே சொல்லப்பட்ட ஆக்டுகளில் எதன்படியாயினும் அந்த அரை வருஷத்துக்குத் தொழில் வரியாய்ச் செலுத்த அவர் மற்றப்படி உட்பட்டிருக்கும் தொகைக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டிலும் அதிகமாக எந்த லோகல் போர்ட், மியுனிஸிபாலிடி அல்லது கன்டோன்மென்டுக்கும் செலுத்த உட்பட்டவராகமாட்டார்.

(4) யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் கம்பெனி வரி விதிக்கபபடாமல் தொழில் வரி மாத்திரம் விதிக்கப்பட்டால், சகல கம்பெனிகளும் தொழில் வரிக்கு உள்ளானவையாகும் ; யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் கம்பெனி வரி தொழில்வரி ஆகிய இவ்விரண்டும் விதிக்கப்பட்டால், கம்பெனி வரி செலுத்துவதற்குட்பட்டிராத கம்பெனிகள் - இந்தப் பிரிவிறகண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் வரி செலுத்துவதற்கு உட்பட்டவையாகும் ; மேலும், கம்பெனி வரி செலுத்துவதற்கு உட்பட்டிருக்கும் கம்பெனிகள் தொழில் வரி செலுத்துவதற்கு உட்பட்டவையாகமாட்டா.''

32. ஷை ஆக்ட் 96-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

" 96. யாதொரு அரை வருஷத்தில் கம்பெனி வரி செலுத்துவதற்குட்பட்ட யாதொரு கம்பெனி விஷயமாகவாவது தொழில் வரி செலுத்துவதற்குட்பட்ட யாதொரு நபர் விஷயமாகவாவது சேரவேண்டியதாயிருக்கும் வரி செலுத்தப்படாவிட்டால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி தாலூகா அல்லது யூனியன் போர்டின் ப்ரெஸிடென்டானவர் - அந்த கம்பெனிக்காகிலும் நபருக்காகிலும் ஒரு நோடிஸ் சேர்ப்பிக்கச் செய்து, அந்தப்படி சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் அந்த வரி செலுத்தவேண்டுமென்று அதில் காணவேண்டும்.''

33. ஷை ஆக்ட் 100-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

" 100. 98-வது பிரிவின்படி விதிக்கப்பட்ட வரியானது - ஒவ்வொரு அரை வருஷ ஆரம்பத்துக்குப் பிறகும் முப்பது தினங்களுக்குள் வீட்டின் சொந்தக்காரராலாவது அனுபோகதாரராலாவது செலுத்தப்படத்தக்கதாகும்.''

34. ஷை ஆக்ட் 104-வது பிரிவில், (3) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (e) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

" (f) இந்திய (ஆக்ஸிலியரி) உதவிப்படையையாவது இந்திய ஸ்தலப்படையையாவது சேர்ந்த ஒருவர் யூனிபாரம் என்னும் உடை தரித்துக்கொண்டு அலுவலின்மேலிருக்கும் காலங்களிலாவது அலுவலுக்குப் போகும் அல்லது அலுவலிலிருந்து திரும்பி வரும் காலங்களிலாவது அவரை ஏற்றிக்கொண்டுபோகிற.''

35. ஷை ஆக்ட் 106-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவுடன் அடியிற் கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

" ஆனால், பிரதேச கவர்ன்மெண்டார் - பொதுவாகவாவது குறித்த யாதொரு விஷயத்திலாவது சுங்கக் கிராதிகள், வாயில்கள், சாவடிகள் ஆகிய இவைகளின் சங்கியையையும் ஸ்தானங்களையும் ஒழுங்குபடுத்துவதற்காகவும், அக்கம்பக்கத்தில் இருக்கிற பிரதேச அதிகார சபைகளின் விஷயத்தில் இன்ன பிரதேச அதிகார சபைகள் குறித்த சுங்க வாயில்களின் விசாரணை வகிக்கவேண்டுமென்பதையும் ஒரு பிரதேச அதிகார சபையாருக்கு ஒரு சுங்கவாயில் அல்லது பல சுங்கவாயில்களிலிருந்து கிடைத்த வருமானத்தில் எவ்வளவை அக்கம்பக்கத்திலிருக்கும் வேறொரு பிரதேச அதிகார சபையாருக்குக் கொடுக்க வேண்டுமென்பதையும் நிச்சயிப்பதற்காகவும் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவு பிறப்பிக்கலாம். "

36. ஷை ஆக்ட் 107-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், ' சாவடியிலாவது ' என்னும் வார்த்தைக்குப் பிறகு ' பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியில்லாமல் அதிலிருந்து 20 மைல் தூரத்துக்குள்ளாக இருக்கும் வேறே யாதொரு சுங்கக் கிராதி, வாயில் அல்லது சாவடியிலாவது ' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

37. ஷை ஆக்ட் 110-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும் :—

" 110. (1) யாத்திரை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் சில வருஷங்களுக்கு ஒரு முறையாகவாவது ஒரே வருஷத்தில் ஒருமுறை அல்லது இரண்டு முறை மாத்திரமேயாவது ஏற்படுகிறபட்சத்தில், யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தையாகிலும் அதன் சமீபத்திலுள்ள இடத்தையாகிலும் விட்டு ரெயில்மூலமாய் வெளியே போகும் நபர்களுக்கு மேலேகண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் விஷயமாயும் குறித்த யாதொரு கால அளவுக்கு மாத்திரம் ஒரு வரி விதிக்கவேண்டும். யாத்திரை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் இதைவிட அடிக்கடி ஏற்படுவதாயிருந்தாலும், யாதொரு யாத்திரை ஸ்தலமானது ஜனங்கள் வருஷமுழுவதும் போகக்கூடிய ஸ்தலமாயிருந்தாலும், வருஷ முழுவதும் ஷை வரி விதிக்கலாம்.

(2) இன்ன சந்தர்ப்பத்திலும் இன்ன கால அளவுக்கும் ஷை வரி விதிக்கவேண்டுமென்பதை டிஸ்ட்ரிக்ட் போர்டார் பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்றும் சம்பந்தப்பட்ட ரெயில்வே பரிபாலகர்களுடன் கலந்து ஆலோசித்தும் நிச்சயிக்கவேண்டும்.

(3) 76-வது பிரிவில் கண்டிருக்கும் வரி விதிக்கப்படுமென்று 77-வது பிரிவின்படி டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்ட் விளம்பரம் பிரசுரித்தால், அந்த வரியை, ஷை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்தும் கால அளவிலும் பிரஸ்தாப பிரதேச விஸ்தீர்ணத்திலாவது அதன் சமீபத்திலாவதுள்ளவையும் ஷை விளம்பரத்தில் சொல்லப்பட்டிருப்பவையுமான ரெயில்வே ஸ்டேஷன்களில் எதை விட்டாகிலும் ரெயில்மூலமாய் யாத்திரை ஸ்தலத்திலிருந்து குறிப்பிடப்பட்டதற்கு அதிகமான தூரத்தில் இருக்கிற வேறே யாதொரு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பிரயாணம் செய்யும் சகல பிரயாணிகளின் டிக்கட்டுகளின் மேலும் உடன் சேர்க்கையான கட்டணமாக வசூலிக்கவேண்டும்.

(4) ஒவ்வொரு வகுப்பு டிக்கெட்டின்பேரிலும் விதிக்கப்படவேண்டிய இந்த வரியின் வீதங்களை டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிச்சயிக்கவேண்டும் ; ஆனால், அவை - பின்வரும் அட்டவணையில் கண்டிருக்கும் வீதங்களுக்கு மேற்படக்கூடாது :—

	வரி.					
	வரையறுக்கப் பட்ட கால அளவுகளுக்கு.			வருஷ முழுவதும்.		
(1)	(2)			(3)		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
முதல் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	0	8	0	0	4	0
இரண்டாம் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	0	4	0	0	2	0
மத்திய வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	0	3	0	0	1	6
மூன்றும் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	0	2	0	0	1	0

ஆனால், ஸீஸன் டிக்கெட் என்னும் குறித்த கால அளவுகளுக்கு ஒரே டிக்கெட்டாகக் கொடுக்கப்படும் டிக்கெட்டுகள் எவையேனும் இருந்தால், அவைகளின் விஷயத்தில் விதிக்க வேண்டிய வீதங்களை, டிஸ்ட்ரிக்ட் போர்டார் சம்பந்தப்பட்ட ரெயில்வே பரிபாலகர்களோடு கலந்து ஆலோசித்து நிச்சயிக்கவேண்டும் ; ஆனால், ஒரு மாதம் அல்லது அதற்குக் குறைந்த யாதொரு கால அளவுக்கு அந்த வீதங்கள் ஷை அட்டவணையின் (2) குறிப்பிட்ட கலத்தில் கண்டிருக்கும் வீதத்துக்கு ஆறு மடங்குக்கு அதிகப்படக்கூடாது.

(5) பிரதேச கவர்ன்மென்டார் - (i) வரி வசூலிப்பதையும், (ii) அதை சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்குக் கொடுப்பதையும், (iii) அதை வசூலிப்பதில் ரெயில்வே பரிபாலகர்களால் செய்யப்பட்ட எவையேனும் செலவுகளைக் கழித்துக்கொள்வதையும், (iv) வரிவிதிப்பது, வசூலிப்பது அல்லது அதைப் பங்கிடுசெய்வதற்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களில் (a) லோகல் போர்டுகளுக்கும் இதர பிரதேச அதிகார சபைகளுக்கும், (b) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு லோகல் போர்டுகளுக்கும் ரெயில்வே பரிபாலகர்களுக்கும் ஏற்படும் விவாதங்களைத் தீர்மானம் செய்வதையும் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக இந்த ஆக்டுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத விதிகள் செய்யலாம்.''

38. ஷை ஆக்ட் 112-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்;—

(a) (iii) அடையாளமிட்ட பகுதியில், 'மார்க்கெட்டுகளையும்' என்னும் வார்த்தைக்குப் பிறகு 'கடைகளையும், கொட்டில்களையும, ப்ளின்துகளையும் (கட்டிடங்களின் அடிப்பரப்புகளையும்)' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (ix) அடையாளமிட்ட பகுதியில், 'அனுகுணமான' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'அனுகுணமானவைகளாய, விவசாய சம்பந்தமான, கைத்தொழில் சம்பந்தமான அல்லது வர்த்தக சம்பந்தமான காரியங்கள் உட்பட' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

39. ஷை ஆக்ட் 115-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

* "115-A. நிர்ணயிக்கப்படக்கூடிய மேல்விசாரணைக்குட்பட்டு, யாதொரு லோகல் போர்டார் - வசூலிக்கமுடியாததென்று தாங்கள் அபிப்பிராயப்படுகிற யாதொரு வரி, சுங்கம், கட்டணம் அல்லது இதர தொகையைக் கணக்கிலிருந்து அடித்துவிடலாம்."

40. ஷை ஆக்ட் 128-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"128. யாதொரு மசூதியாவது கோயிலாவது மடமாவது மதஆராதனை அல்லது போதனைசெய்யும் வேறே இடமாவது யாதொரு தாலூகா அல்லது யூனியன் போர்டின் எல்லைகளுக்குள்ளாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் இருந்து, வருஷ முழுவதிலுமோ குறித்த சில சந்தர்ப்பங்களிலோ ஜனங்கள் விசேஷமாய் ஷை மசூதி முதலியவைகளுக்குப் போவதாயிருந்தால், பொது ஜனங்களின் தேகாரோக்கியம், பந்தோபஸ்து அல்லது சௌகரியத்துக்காக அவசியமான விசேஷ ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட தாலூகா அல்லது யூனியன் போர்டார் செய்யவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட மசூதி, கோயில் அல்லது மடத்தின் மேல்விசாரணையாவது மதஆராதனை அல்லது போதனை செய்வதற்கான வேறே யாதொரு இடத்தின் மேல்விசாரணையாவது வகிக்கும் ட்ரஸ்டி அல்லது இதர நபர் சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் நிதிக்குப் பிரதேச கவர்ன்மென்டாரால் நிச்சயிக்கப்படக்கூடியபடி மீண்டும் மீண்டும் கொடுக்கப்படத்தக்க அல்லது அந்தப்படி கொடுக்கப்படத்தக்கதாயிராத சகாயத்தொகைகள் கொடுக்கவேண்டுமென்று ஷை போர்டார் உத்தரவு செய்யலாம்."

41. ஷை ஆக்ட் 137-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'நிர்ணயிக்கப்படும் அளவுக்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'நிர்ணயிக்கப்படக்கூடிய நபர்களின் விஷயத்திலும் அளவுக்கும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

42. ஷை ஆக்ட் 159-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அந்த போர்டாருடைய அங்கீகாரத்தின்பேரில்' என்னும் வார்த்தைகளையும், 162-வது பிரிவில் 'போர்டாருடைய அங்கீகாரத்தின்பேரில்' என்னும் வார்த்தைகளையும் விட்டுவிடவேண்டும்.

43. ஷை ஆக்ட் 160-வது பிரிவைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவில், 'வெகுசாய்' என்னும் வார்த்தைக்குமுன், 'வெகுசாய் அந்த பாட்டையை அப்படியே உபயோகிப்பதற்கு ஹானிஉண்டாகும் போலிருந்தாலும்,' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

44. ஷை ஆக்ட் 166-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'வாடகைக்கு ஓட்டவுங்கூடாது, அந்த பாட்டையின்மேல் பிரத்தியேகமான சத்தங்களுக்காகிலும் கட்டணங்களுக்காகிலும் பிரயாணிகளையாவது சரக்குகளையாவது ஏற்றிக்கொண்டுபோவதற்காக அப்படிப்பட்ட எந்த மோ

---

* டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்ட் 118-வது பிரிவு.

டார் வண்டியையும் உபயோகிக்கவுங்கூடாது' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'வாடகைக்கு ஓட்டக்கூடாது' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும் :—

"(2) டிஸ்ட்ரிக்ட் போர்டார் - பிரதேச கவர்ன்மென்டாரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்று, ஷை வண்டிகளில் போகும் பிரயாணிகளுக்காக கட்டண வீதங்களை யும் அவைகளில் கொண்டுப்போகப்படும் சாமான்களுக்குக் கட்டண வீதங்களையும் நிச்சயித்தும், இன்ன திட்டங்களின்மேல் ஷை லைஸென்ஸ்-களை கொடுக்கப்படுமென்று குறிப்பிட்டும் ரெகுலேஷன்கள் செய்யலாம்."

45. ஷை ஆக்ட் 174-வது பிரிவில், 'வாங்கலாம்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'வாங்கவேண்டும்' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

46. ஷை ஆக்ட் 183-வது பிரிவில், 'வஸ்துக்களையேனும்' என்னும் வார்த்தைக்குப் பிறகு 'பிராணிகளையேனும்' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

47. ஷை ஆக்ட் 190-வது பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட விலக்கு நிபந்தனைக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"மேலும்,

(i) அப்படிப்பட்ட விளம்பரம் எதுவும் - அது பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து 60 நாள்வரையில் செலாவணியாகமாட்டாது ; அல்லாமலும்,

(ii) அப்படிப்பட்ட விளம்பரம் எதுவும் - 1920-ம்ஹுலத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்ட் 255-வது பிரிவின்படி யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலாரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரம் செலாவணியாய்க்கொண்டிருக்கும் எந்த விஸ்தீர்ணத்திலும் செலவணியாகமாட்டாது."

48. ஷை ஆக்ட் 193-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'தாலூகா போர்டார் -' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு '1920-ம்ஹுலத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்ட் 249-வது பிரிவின்படி மியுனிஸிபல் கௌன்ஸிலாரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரம் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு விஸ்தீர்ணமாயிராமல்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

49. ஷை ஆக்ட் 199-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (h) அடையாளமிட்ட பகுதியில், 'கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்கள் அல்லது ஸானிடெரி போர்ட் என்னும் சுகாதார சங்கத்துக்குள்ள' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அல்லது கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்குள்ள' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (o) அடையாளமிட்ட பகுதியை விட்டுவிட்டு, (p), (q), (r) என்று அடையாளமிட்ட பகுதிகளுக்கு முறையே (o), (p), (q) என்று மீண்டும் அடையாளம் போடவேண்டும்.

(c) இவ்விதம் மீண்டும் அடையாமிட்டபடியுள்ள (q) என்னும் பகுதியில், 'எலெக்ஷன் சம்பந்தமான விசாரணைகள் நடத்த அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும்' என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு, 'கட்டாயப்படுத்தவும்' என்னும் வார்த்தைக்குப் பிறகு 'அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும்' என்னும் வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(d) (q) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் :—

"(r) டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும் யூனியன் போர்டுகளுக்கும் அவைகளின் ப்ரெஸிடென்டுகளுக்குமுள்ள பரஸ்பர சம்பந்தங்களைக் குறித்தும், இன்ன விஷயங்கள் சம்பந்தமாயும் இன்ன அளவுக்கும்—

(i) யாதொரு தாலூகா போர்டின் தீர்மானங்களாவது யாதொரு தாலூகா போர்ட் ப்ரெஸிடென்டின் உத்தரவுகள் அல்லது நடவடிக்கைகளாவது டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கோ அல்லது அதன் ப்ரெஸிடென்டுக்கோ அப்பீல் செய்துகொள்ளப்படுவதற்காகிலும் டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்ட் அல்லது அதன் ப்ரெஸிடென்டினால் புனராலோசனை செய்து திருத்தப்படுவதற்காகிலும் உள்ளாகுமென்பதைக் குறித்தும்,

(ii) யாதொரு யூனியன் போர்டின் தீர்மானங்களாவது யாதொரு யூனியன் போர்ட் ப்ரெஸிடென்டின் உத்தரவுகள் அல்லது நடவடிக்கைகளாவது டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கோ தாலூகா போர்டாருக்கோ அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டின் ப்ரெஸிடென்டுக்கோ தாலூகா போர்டின் ப்ரெஸிடென்டுக்கோ அப்பீல் செய்துகொள்ளப்படுவதற்காகிலும்

டிஸ்ட்ரிக்ட் போர்ட் அல்லது தாலூகா போர்டாராலாயினும் அதன் ப்ரெஸிடென்டா லாயினும் புனராலோசனை செய்து திருத்தப்படுவதற்காகிலும் உள்ளாகுமென்பதைக் குறித்தும்,

"(s) கம்பெனி வரியிலிருந்தும், தொழில் வரியிலிருந்தும், சுங்கத்திலிருந்தும் கிடைக்கும் வரும்படியை சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள பிரதேச அதிகார சபைகள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

"(t) கம்பெனி வரி விதிக்கும் காரியங்களுக்காக கம்பெனிகளின் மொத்த வியாபார மதிப்பை இன்ன கோட்பாடுகளின்படி நிச்சயிக்கவேண்டுமென்பதைக் குறித்தும்."

50. ஷை ஆக்ட் 202-வது பிரிவில், 10-வது பகுதியிற்கண்ட (e) அடையாளமிட்ட உட்பகுதியாக அடியிற்கண்ட உட்பகுதியைச் சேர்த்துக்கொண்டு, இப்போதிருக்கும் (e) அடையாளமிட்ட உட்பகுதிக்கு (f) அடையாளமிட்ட உட்பகுதி என்று மீண்டும் அடையாளமிடவேண்டும் :—

"(e) அந்த மார்க்கெட்டுகளில் தொழில் நடத்திக்கொண்டுவருகிற ப்ரோக்கர்களுக்கும், கம்மிஷன் ஏஜென்டுகளுக்கும், எடை போடுகிறவர்களுக்கும், அளப்பவர்களுக்கும் லைசென்ஸ் கொடுப்பதற்காகவும் அவர்களை மேல்விசாரணை செய்வதற்காகவும்."

51. ஷை ஆக்ட் 205-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

* "(2) அப்படிப்பட்ட சகாயச் சட்டங்களாவது அவைகளில் செய்யப்படும் மாறுதல்களாவது கிரமமாய் ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்டானபிறகு அவைகளை, டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் இங்க்லிஷிலும் டிஸ்ட்ரிக்டில் வழங்கும் ஒரு சுதேச பாஷையிலும் பிரசித்தஞ் செய்யவேண்டும்; மேலும், அவை (யாதொரு விசேஷ காரணத்தினால் பிரதேச கவர்ன்மென்டார் வேறேவிதமாய்க் கட்டளையிட்டாலன்றி மற்றப்படி) அந்தப்படி அவை பிரசித்தம் செய்யப்பட்டதிலிருந்து மூன்று மாதத்துக்குப் பிறகு செலாவணியாகத் தொடங்கும்."

(b) இப்போதிருக்கும் (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு (3) என்று மீண்டும் இலக்கமிட்டு, 'ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்ட' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'ஊர்ஜ்ஜிதம் செய்து பிரசித்தம் செய்யப்பட்ட' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

52. ஷை ஆக்ட் 212-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் 'நிஷ்கரிஷை செய்யக்கூடிய வீதப்படி' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'நிஷ்கரிஷை செய்யக்கூடிய பரிமாணங்களின்மேலும் வீதங்களின்படியும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

53. ஷை ஆக்ட் 215-வது பிரிவில், 'இந்த ஆக்டின்படிக்கான' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'பிரதேச கவர்ன்மென்டாரால் பிறப்பிக்கப்பட்ட விளம்பரமாயிராமல் இந்த ஆக்டின்படிக்கான வேறே' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

54. ஷை ஆக்ட் 224-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"224. இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாவது யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் விதிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கப்பட்ட யாதொரு அபராதம், செலவு, வரி அல்லது இதர தொகையானது-அது அபராதமாயிருந்தால் எப்படியோ அப்படியே க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தின்படி ஷை மாஜிஸ்ட்ரேட்டால் வசூலிக்கப்படத்தக்கதாகும்; மேலும், அது-வசூலிக்கப்படுவதன்மேல், இந்த ஆக்டின் காரியங்களுக்காக உபயோகிக்கப்படும்படி சம்பந்தப்பட்ட லோகல் போர்டாருக்குக் கொடுத்துவிடப்படவேண்டும்."

55. ஷை ஆக்ட் 233-வது பிரிவில், 'பிரதேச கவர்ன்மென்டார்-' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு '128-வது பிரிவின்படி கொடுக்கப்படக்கூடிய சகாயத்தொகையை நிச்சயிக்கவாவது' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

56. ஷை ஆக்ட் 234-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"234. யாதொரு லோகல் போர்டுக்கும் ஒரு கன்டோன்மென்ட் அல்லது பல கன்டோன்மென்டுகளுக்கும் அல்லது வேறே பிரதேச அதிகார சபை அல்லது சபைகளுக்கும் இந்த ஆக்டில் அல்லது வேறே யாதொரு ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி ஏற்

* 1920-ம் வருஷத்திய டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்ட் 310-வது பிரிவு.

படும் எவையேனும் விஷயங்கள் சம்பந்தமாய் விவாதம் உண்டாயிருந்து, ஷை லோகல் போர்டும் சம்பந்தப்பட்ட கன்டோன்மென்டும் அல்லது பிரதேச அதிகார சபையும் அல்லது அதிகார சபைகளும் அதைத் தங்களுக்குள்ளேயே சமாதானமாய்ப் பைசல்செய்து கொள்ளமுடியாதென்று பிரதேச கவர்ன்மென்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் அந்த விவாதத்தைப்பற்றி விசாரித்து,

(a) அதைத் தாங்களே தீர்மானம் செய்யலாம் ; அல்லது,

(b) அதைத் தீர்மானம் செய்வதற்காக ஒரு மத்தியஸ்தருக்காகிலும் நபர்கள் சேர்ந்த ஒரு சபைக்காகிலும் அனுப்பலாம் ; அல்லது,

(c) அதைத் தீர்மானம் செய்வதற்காக 30-வது பிரிவின்படி ஒரு கூட்டுக்கம்மிட்டியை ஏற்படுத்தும்படி கட்டளையிடலாம்.

(a) குறிப்பிட்ட பகுதியின்படி பிரதேச கவர்ன்மென்டாரின் தீர்மானமாவது, (b) குறிப்பிட்ட பகுதியின்படி மத்தியஸ்தர் அல்லது நபர்கள் சேர்ந்த சபையின் தீர்மானமாவது, (c) குறிப்பிட்ட பகுதியின்படி கூட்டுக்கம்மிட்டியின் தீர்மானமாவது முடிவான தாகும் ; மேலும், அது- விவாதம் செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு பிரதேச அதிகார சபையையும் கட்டுப்படுத்துவதாகும்.''

57. ஷை ஆக்ட் 240-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (3) குறிப்பிட்ட உட்பிரிவில், 'ஒருவகை செய்வது விஷயமாய்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'ஒருவகை செய்வது விஷயமாயும், ஷை லோகல் போர்டாரிடம் சங்கிரமித்திருந்து, 5-வது பிரிவின்படி வெளிவிடப்பட்ட விளம்பரத்தின் காரணமாக எந்தப் பிரதேச விஸ்தீர்ணத்தில் ஷை லோகல் போர்டார் விசாரணை அதிகாரம் செலுத்துவது நின்றுபோகிறதோ அந்தப் பிரதேச விஸ்தீர்ணத்தில் இருக்கும் யாதொரு சொத்தை ஒருவகை செய்வது விஷயமாயும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(b) (3) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்டதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் :—

"(4) எந்த போர்டுகளின் விசாரணை அதிகாரமானது 5-வது பிரிவின்படியாவது, 10-வது பிரிவின்படியாவது, 47-வது பிரிவின்படியாவது, 48-வது பிரிவின்படியாவது, 49-வது பிரிவின்படியாவது பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரத்தினலே முக்கியாம்சத்தில் பாதிக்கப்படுகிறதென்று பிரதேச கவர்ன்மென்டாராகிலும் டிஸ்ட்ரிக்ட் போர்டாராகிலும் அபிப்பிராயப்படுகிறார்களோ அந்த போர்டுகளின் விஷயத்தில், சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரதேச கவர்ன்மென்டாராவது டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது - ஷை விளம்பரத்தின் தேதியில் உத்தியோகம் வகித்துக்கொண்டிருக்கும் மெம்பர்களின் உத்தியோக கால அளவைக் குறித்து தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவுகள் பிறப்பிக்கலாம் ; மேலும், புதிதாய் மெம்பர்கள் நியமிக்கப்படவேண்டியிருந்தாலும் ஏற்கனவேயிருக்கும் மெம்பர்களுக்குள் ஷை விளம்பரத்தின் தேதியில் ஏற்பட்ட காலிஸ்தானங்களைப் பூர்த்தி செய்யவேண்டியிருந்தாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரதேச கவர்ன்மென்டாராவது டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது - ஷை விளம்பரத்தின் தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு உத்தியோகம் வகிக்கும்படியாக அந்த ஸ்தானங்களுக்கு நபர்களை நியமிக்கலாம்."

58. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 3-வது ஷெட்யூலில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) 'தாலூகா போர்ட் மெம்பர்களைத் தெரிந்தெடுப்பவர்கள்' என்னும் தலைப்பை, 'டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர்களையும் தாலூகா போர்ட் மெம்பர்களையும் தெரிந்தெடுப்பவர்கள்' என்று மாற்றவேண்டும்.

(b) கடைசி வாக்கியத்திற்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

'அவர் - யாதொரு ரெவினியு தாலூகாவின் (எலேக்டொரல் ரோல்) தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு யோக்கியதையுள்ளவராவார்'.

(c) (a) முதல் (e) வரையிலுள்ள பகுதிகளிலும், (h), (i) அடையாளமிட்ட பகுதிகளிலும் 'தாலூகா' என்று பொருள்படுகிற வார்த்தை வருகிற இடங்களிலெல்லாம் அதற்கு பர்த்தியாக 'ரெவினியு தாலூகா' என்று பொருள்படும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

59. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) 5-வது விதியில்,

(i) (4) குறிப்பிட்ட உபவிதியிலே,

(1) 'கிரமப்பிசகாய்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'அஜாக்கிரதையாகவோ அல்லது கிரமப்பிசகாகவோ' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்;

(2) 'வரி விதிப்புப் புஸ்தகங்களிலிருந்து' என்னும் வார்த்தைகளுக்குமுன் 'யாதொரு வரிக்குச் சம்பந்தப்பட்ட' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்;

(ii) (4) குறிப்பிட்ட உபவிதிக்குப் பிறகு அடியிற்கண்டதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்:—

"(5) அந்தப்படி செய்யும் திருத்தமானது - அதைச் செய்வது நியாயமாகுமென்று சொல்வதற்குள்ள சந்தர்ப்பங்கள் நடைமுதல் அரைவருஷத்திலோ அதற்கு அடுத்து முந்திய அரை வருஷத்திலோ மிகவும் முற்பட்ட எந்தத் தேதியில் ஏற்பட்டிருந்தனவோ அந்தத் தேதியிலிருந்து செலாவணியாயிருப்பதாகக் கருதப்படும்."

(b) 8 முதல் 10 வரையிலுள்ள விதிகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

"8. (1) சம்பந்தப்பட்ட தாலூகா அல்லது யூனியன் போர்ட் ப்ரெஸிடென்டானவர் - கம்பெனிகளுக்குக் கம்பெனி வரி விதிக்கவேண்டும்.

(2) ஷை வரியானது - எந்த அரை வருஷத்துக்கு வரி விதிக்கப்படுகிறதோ அதற்கு அடுத்து முந்தியதாயுள்ள அரை வருஷத்தில் கம்பெனியின் மொத்த வியாபார மதிப்பை அனுசரித்து விதிக்கப்படவேண்டும். யாதொரு கம்பெனி அப்படிப்பட்ட முந்திய அரை வருஷ முழுவதிலும் பிரஸ்தாப பிரதேச விஸ்தீர்ணத்தில் வியாபாரம் நடத்தியிராவிட்டாலும், அப்படிப்பட்ட முந்திய அரை வருஷத்தின் மொத்த வியாபார மதிப்பை நிச்சயித்தறிய முடியாதென்று ப்ரெஸிடென்ட் அபிப்பிராயப்பட்டாலும், எந்த அரை வருஷத்துக்காக வரி விதிக்கப்படுகிறதோ அந்த அரை வருஷத்தில் வியாபார மதிப்பை ப்ரெஸிடென்ட் உத்தேசமாய்க் கணக்கிட்டு அதை அனுசரித்து ஷை வரி விதிக்கவேண்டும்.

(3) 96-வது பிரிவின்படி நோடீஸாவது 32-வது விதியின்படி (bill) பில்லாவது சேர்ப்பிக்கப்பட்டிராத பட்சத்திலே, ப்ரெஸிடென்டானவர் - (1) குறிப்பிட்ட உபவிதியின்படி தம்மால் விதிக்கப்பட்ட வரியைப் புனராலோசனைசெய்து திருத்தவேண்டுமென்று தாம் தெரிந்துதிருப்தியடைந்தால், அந்தப்படியே திருத்தலாம்; மேலும், வரி விதிக்கப்பெற்ற கம்பெனியார் விண்ணப்பம் செய்துகொண்டால், அவர் அந்தப்படியே திருத்தவேண்டும்.

தொழில் வரி விதிப்பது.

9. (1) தொழில் வரி விதிக்கும் காரியங்களுக்காக நபர்களை அடியிற்கண்ட வகுப்புகளாகப் பிரிக்கவேண்டும்; மேலும், ஒவ்வொரு வகுப்பாருக்கும் அடியிற்கண்டபடி உச்ச அரைவருஷ வரி விதிக்கத்தக்கதாகும்:—

வகுப்பு.	அரை வருஷ வருமபடித் தொகை.		உச்ச அரை வருஷ வரி.		
	மேற்பட்டு	மேற்படாமல்			
	ரூ.	ரூ.	ரூ.	அ.	ப.
I	50,000 க்கு	..	500	0	0
II	40,000	50,000 க்கு	375	0	0
III	30,000	40,000	300	0	0
IV	18,000	30,000	225	0	0
V	12,000	18,000	135	0	0
VI	9,000	12,000	90	0	0
VII	6,000	9,000	60	0	0
VIII	4,200	6,000	35	0	0
IX	3,000	4,200	21	0	0
X	1,800	3,000	12	8	0
XI	1,200	1,800	6	0	0
XII	600	1,200	4	0	0
XIII	300	600	1	8	0
XIV	150	300	0	8	0

(2) (1) குறிப்பிட்ட உபவிதியில் குறிப்பிடப்பட்ட உச்ச தொகைக்கு உட்பட்டு ஒவ்வொரு வகுப்பாருக்கும் விதிக்கப்படத்தக்க வரியைக் டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிச்சயிக்க வேண்டும்:

ஆனால், எந்த விஷயத்திலும் யாதொரு வகுப்பாருக்கு விதிக்கப்படும் வரிக்கும் அந்த வகுப்புக்கு ஏற்பட்ட உச்ச வரும்படிக்கும் உள்ள சங்கியாபரிமாணமானது - அதற்குக் கீழ்ப்பட்ட யாதொரு வகுப்பாருக்கு விதிக்கப்படும் வரிக்கும் அந்த வகுப்புக்கு ஏற்பட்ட உச்ச வரும்படிக்கும் உள்ள பரிமாணத்துக்குக் குறைவாயிருக்கக்கூடாது.

(3) டிஸ்ட்ரிக்ட் போர்டார் - (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்டிருக்கிற யாதொரு வகுப்பாரையாவது பல வகுப்பாரையாவது தொழில் வரி செலுத்த உட்பட்டிருப்பதனின்றும் நிவாரணே செய்யலாம் : ஆனல், எந்த வகுப்பாரையும், ஷை வீத நிர்ணயத்தில் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாயுள்ள யாதொரு வகுப்பார் வரி செலுத்துவதற்கு உட்பட்டிருக்கும்போது, நிவாரணே செய்யக்கூடாது.

(4) சம்பந்தப்பட்ட தாலூகா அல்லது யூனியன் போர்ட் ப்ரெஸிடென்டானவர் - வரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டிருக்கும் ஒவ்வொரு நபருக்கும், அவருக்கு அரை வருஷத்தில் என்ன வரும்படி கிடைக்கிறதென்று தாம் அபிப்பிராயப்படுகிறாரோ அந்த வரும்படிக்கு எற்றபடி, வித நிர்ணயத்தில் ஒரு வகுப்பு ஏற்படுத்தவேண்டும் ; மேலும், 96-வது பிரிவின்படி நோடிஸாவது 32-வது விதியின்படி பில்லாவது சேர்ப்பிக்கப்பட்டிராத பட்சத்தில், அவர் - ஒரு வகுப்பில் தாம் சேர்த்திருக்கும் யாதொரு நபர் வேறொரு வகுப்பில் சேர்க்கப்படவேண்டுமென்று தாம் தெரிந்துதிருப்தியடைந்தால், அந்தப்படி வகுப்பு வாரி பிரிவினை செய்திருப்பதைப் புனராலோசனை செய்து திருத்தவேண்டும.

10. யாதொரு நபர் யாதொரு தாலூகா அல்லது யூனியன் போர்டின் விசாரணை அதிகாரத்துக்குள் இருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்குள் ஆபிஸாவது தொழிலிடமாவது வைத்திருந்து, குறிப்பிடப்பட்ட சங்கியையுள்ள தினங்களுக்கு அவர் அதனுடன் சம்பந்தப்பட்டிருந்தால், அவர் - 93-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு ஷை பிரதேச விஸ்தீர்ணத்துக்குள் ஒரு தொழில் - கைவினை அல்லது வேலையைச் செய்திருப்பதாகவாகிலும் வியாபாரம் நடத்தியிருப்பதாகவாகிலும் கருதப்படுவார்.''

60. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 5-வது ஷெட்யூலில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) B.—தாலூகா பண்ட் என்னும் தலைப்பின் கீழுள்ள 1-வது விதியிற்கண்ட (1) அடையாளமிட்ட பகுதியில, 'டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளாயிராத வேறே பாட்டைகளை யூனியனல்லாத விஸ்தீர்ணங்களில ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'யூனியன் விஸ்தீர்ணங்களில் தாலூகா பாட்டைகளையும் யூனியனல்லாத விஸ்தீர்ணங்களில் டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளாயிராத மற்ற சகல பாட்டைகளையும் ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

(b) C.—யூனியன் பண்ட் என்னும் தலைப்பின் கீழுள்ள 1-வது விதியிற்கண்ட (1) அடையாளமிட்ட பகுதியில் 'டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளின்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா பாட்டைகளின்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) 3-வது விதியில், 'டிஸ்ட்ரிகட் பாட்டைகளாக' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்ட் பாட்டைகளாக' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(d) 5-வது விதியைச் சேர்ந்த B.—தாலூகா பண்டுகள் என்னும் தலைப்பின் கீழுள்ள (15) அடையாளமிட்ட பகுதியில், 'யூனியனல்லாத விஸ்தீர்ணங்களில் டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளாயிராத வேறே பாட்டைகளுக்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'தாலூகா பாட்டைகளுக்கு' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(e) 5 வது விதியைச் சேர்ந்த C.—யூனியன் பண்டுகள் என்னும் தலைப்பின் கீழுள்ள (12) அடையாளமிட்ட பகுதியில், 'மரங்கள், யூனியனிலுள்ள' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா பாட்டைகளல்லாத வேறே பாட்டைகளுககுச் சம்பந்தப்பட்டவைகளாய் யூனியன்களிலுள்ள மரங்கள' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும.

61. (1) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரும் - பிரதேச கவர்ன்மென்டாரின் அங்கீகாரத்தைப் பெற்றும், இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கினபிறகு தாங்கள் நிஷ்கரிஷை செய்யக்கூடிய தேதிக்கு முன்னதாகவும், அடியிற்கண்ட விஷயங்களை நிச்சயித்து அறிக்கை செய்யலாம் :—

(a) டிஸ்ட்ரிக்டிலுள்ள ஒவ்வொரு ரெவினியு தாலூகாவும் தெரிந்தெடுக்கப்படும் இத்தனை மெம்பர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பலாமென்பது ;

(b) உத்தியோக முறைமையில் மெம்பராயிருப்பவரல்லாமல், இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும்போது உத்தியோகம் வகித்துக்கொண்டிருக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட வேறே ஒவ்வொரு மெம்பரும் இன்ன ரெவினியு தாலூகாவால் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டுமென்பது ;

(c) உத்தியோகமுறைமையில் மெம்பர்களாயிருப்பவர்களல்லாத தெரிந்தெடுக்கப்பட்ட வேறே மெம்பர்களுக்குள் இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும்போது ஏற்பட்

டிருக்கும் காலி ஸ்தானம் ஒவ்வொன்றும் எலெக்ஷன் காரியங்களுக்காக இன்ன ரெவினியு தாலூகாவைச் சேர்ந்ததாகக கொள்ளப்படவேண்டுமென்பது.

(2) ரெவினியு தாலுகாக்களின்படி தெரிந்தெடுப்பவர்களின் முதல் ஜாபிதாக்கள் தயார் செய்யப்படுகிறவரையில், இந்த ஆக்ட் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு தாலூகா போர்டின் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவை - பிரதேச கவர்ன்மென்டார் பிறப்பிக்கக்கூடிய கட்டளைகளுக்குட்பட்டு, அவசியமாயிருக்கும்போது ஷை தாலூகா போர்ட் விஸ்தீர்ணத்தில் எத்தனை ரெவினியு தாலூகாக்கள் இருக்கின்றனவோ அத்தனை ஜாபிதாக்களாகப் பிரிக்கவேண்டும்.

(3) யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டைச் சேர்ந்தவர்களாய் உத்தியோக முறைமையில் மெம்பர்களாயிராமல் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் இதர மெம்பர்களுக்குள் இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும்போது ஏற்பட்டிருக்கிற அல்லது அதற்குப் பிறகும் இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கின பிறகு தெரிந்தெடுப்பவர்களின் முதல் ஜாபிதா தயார் செய்யப்படுவதற்கு முன்னும் ஏற்படுகிற காலி ஸ்தானங்களை இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள 1920-ம்௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின் படி எலெக்ஷன மூலமாய் பூர்த்திசெய்யவேண்டும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

1920-ம்௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டை சுமார் பதினெட்டு மாதகாலம் வாஸ்தவத்தில் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து பார்த்ததில் ஏற்பட்ட அனுபவத்தினால் தெரியவந்த கஷ்டங்களை நிவர்த்திசெய்வதே இந்த மசோதா ஆக்டின் முக்கிய நோக்கமாகும்.

அமைப்பு.

இந்த மசோதா ஆக்ட் மூலமாய் இந்தத் தலைப்பில் இரண்டு முக்கியமான மாறுதல்கள் செய்யப்படுகின்றன. கூட்டுக் கம்மிட்டிகள் பிரவர்த்திக்கக்கூடிய சந்தர்ப்பங்களை விஸ்தாரப்படுத்தி, அவைகளின் அலுவல்களை அதிகப்படுத்தவும் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் விஷயத்தில் நேராய்த் தெரிந்தெடுக்கும் முறையை அமுலுக்குக் கொண்டுவரவும் உத்தேசித்திருக்கிறது. அபிப்பிராய பேதங்கள் எவையேனும் ஏற்பட்டால் அவைகளைப் பைசல் செய்வதற்கும் பிரதேச சபைகளெல்லாம் எந்த விஷயங்களில் அக்கறையுள்ளவைகளாயிருக்கின்றனவோ அல்லது எந்தவிஷயங்களில் பொறுப்புடையவைகளாய் இருக்கின்றனவோ அந்த விஷயங்களில் ஒத்துழைப்பதற்கும் அந்த சபைகளைச் சேர்ந்த கூட்டுக் கம்மிட்டிகள் ஏற்படுத்தும்படி நிர்ப்பந்திக்க கவர்ன்மென்டாருக்கு அதிகாரம் கொடுப்பது அவசியமென்று தெரியவந்திருக்கிறது. சகல பிரதேச சபைகளும் சம்மதித்தால் மாத்திரமே இப்போது கூட்டுக் கம்மிட்டி ஏற்படுத்தலாம். அப்பிரகாரமே, கவர்ன்மென்டாரும் குறித்த சிலசந்தர்ப்பங்களில் ஷை சபைகளை ஏற்படுத்தும்படி ஆலோசனை மாத்திரம் சொல்லலாம். மேலும், அப்படிப்பட்ட கம்மிட்டிகளுக்கு அதிகாரங்களைப் பிரித்துக்கொடுப்பது விஷயமாய் இப்போதிருக்கிற சட்டமானது தெளிவற்றதாயிருப்பது மாத்திரமல்லாமல், அந்தக் கம்மிட்டிகளின் அமைப்பையும் அவைகள் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையையும் சரியாய் நிச்சயிப்பதற்கு அதில் நிபந்தனை கண்டிருக்கவும் இல்லை. அவசியமாயிருந்தால் கூட்டுக் கம்மிட்டிகளை அமைக்கும்படி நிர்ப்பந்திப்பதற்கு இந்த மசோதா ஆக்டில் அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது. மேலும், அவைகள் கவனிக்கவேண்டிய வேலையையும் விஸ்தாரப்படுத்தியிருக்கிறது. இந்தக் கம்மிட்டிகளில் வேலை சரியாய் நடந்தேறுவதற்காக ரெகுலேஷன்கள் செய்யவும் அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது. இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு மெம்பர்கள் நேராய்த் தெரிந்தெடுக்கப்படுகிறதில்லை. அதாவது, உத்தியோக முறைமையில் மெம்பர்களாயிருப்பவர்கள், நேமகம் செய்யப்படும் மெம்பர்கள் ஆகிய இவர்களைத் தவிர டிஸ்ட்ரிக்ட் போர்டிலுள்ள இதர மெம்பர்களின் ஸ்தானங்களானவை தாலூகா போர்ட் மெம்பர்கள் தெரிந்தெடுப்பது மூலமாகப் பூர்த்தி செய்யப்படுகின்றனவேயொழிய, பொது ஜனங்களால் தெரிந்தெடுத்துப் பூர்த்தி செய்யப்படுவதில்லை. சாதாரணமாய் வரி செலுத்துகிறவர்கள் இந்த ஸ்தானங்களுக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும்படிச் செய்ய இப்போது உத்தேசித்திருக்கிறது.

சொத்து.

டிஸ்ட்ரிக்ட் பாட்டைகள் தாலூகா பாட்டைகள் ஆகிய இவைகளின் பாகங்கள் யூனியன் எல்லைகளுக்குள் இருந்தால், அவை யூனியன் போர்டுகளிடத்தில் சங்கிரமித்திருப்பதற்கு பர்த்தியாக முறையே டிஸ்ட்ரிக்ட் போர்டுகளிடத்திலும் தாலூகா போர்டுகளிடத்திலும் சங்கிரமிக்கச் செய்யும்படி 60-வது பிரிவைத் திருத்தியிருக்கிறது.

வரி விதிப்பது.

கம்பெனிகளுக்கு வரி, யாத்திரைக்காரர்களுக்கு வரி ஆகிய இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் முக்கியாம்சத்தில் மாற்றப்பட்டிருக்கின்றன. கம்பெனிகளின் தொகை செலுத்தப்பட்ட மூலதனத்தின்மேல் அவைகளுக்கு வரி விதிப்பதில் இப்போது

ஏற்பட்டுள்ள அனேக ஒழுங்கீனமான விஷயங்களை நீக்கிவிட உத்தேசித்திருக்கிறது. பிரதேச விஸ்தீர்ணத்தில் அவைகள் நடத்திய மொத்த வியாபார மதிப்பை அனுசரித்து அவைகளுக்கு இனி வரி விதிக்கப்படும். கம்பெனி வரி தொழில் வரி, ஆகிய இவைகளுக்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளின் சொல்லமைப்பைத் திருத்தியிருக்கிறது. ஓரிடத்துக்கு வருகிற பிரயாணிகளிடமிருந்தும் அதை விட்டு வெளியே போகிற பிரயாணிகளிடமிருந்தும் யாத்திரைக்காரர்களின் வரி வசூலிப்பதனால், அந்த வரியை இந்தியா முழுவதும் அனேக ஸ்டேஷன்களில் விதிக்கவேண்டியிருக்கிறது. இதனால் பல ரெயில்வே பரிபாலகர்களின் கணக்குகள் பாதிக்கப்படுகின்றன. இது அனாவசியமாய் வேலையைச் சிக்கலாக்குவதாகும். ஆகவே, யாத்திரைக்காரர்களுக்கு ஒரேமுறை, அதாவது, அவர்கள் யாத்திரை ஸ்தலத்தை விட்டுப்போகும்போது யாத்திரை ஸ்தலத்துக்கு அதிசமீபத்திலிருக்கும் ரெயில்வே ஸ்டேஷன் அல்லது ஸ்டேஷன்களில் மாத்திரமே வரிவிதிக்க உத்தேசித்திருக்கிறது. யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கும் உச்ச வரி வீதங்களை இரட்டத்தனை ஆக்கியிருக்கிறது.

சுங்கம்.

மியுனிஸிபாலிடிகள் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆகிய இவைகளுக்குள்ளும், ஒரு டிஸ்ட்ரிக்ட் போர்ட் இன்னொரு டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஆகிய இவைகளுக்குள்ளும் சுங்கவாயில்களை இன்ன இடத்தில் அமைக்கவேண்டுமென்பது விஷயமாயும் சுங்க வருமானத்தைப் பங்கிட்டுக்கொள்வது விஷயமாயும் சமீபத்தில் ஏற்பட்ட விவாதங்களே இந்தத் தலைப்பில் செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தத்தங்களுக்குக் காரணமாகும். இனி கவர்ன்மெண்டாரின் அனுமதியில்லாமல் 20 மைல் தூரத்துக்குள் ஒரு தடவைக்கு அதிகமாய்ச் சுங்கம் வசூலிக்கக்கூடாது. மேலும், பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து சுங்கவாயில்களின் சங்கியையையும் அவைகள் அமைக்கப்படும் இடங்களையும் அக்கம்பக்கத்திலுள்ள பிரதேச அதிகார சபைகள் வருமானத்தைப் பங்கிட்டுக் கொள்வதையும் குறித்து ஒழுங்கேற்படுத்தும் காரியத்துக்காக கவர்ன்மெண்டார் பிரவேசிப்பதற்கான அதிகாரம் அவர்களிடத்திலேயே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பல வகைப்பட்டவை.

மியுனிஸிபல் ஹத்துகளுக்கு மூன்று மைல் தூரத்துக்குள்ளிருக்கும் விஸ்தீர்ணம் சம்பந்தமாய் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளுக்கும், பிரஸ்தாப ஆக்டின் 7-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்களில் எதற்காகவாகிலும் உபயோகிக்கப்படும் இடங்களுக்கும் லைஸென்ஸ் கொடுக்கும் விஷயத்தில் மியுனிஸிபல் கௌன்ஸில்களுக்கும் லோகல் போர்டுகளுக்கும் விசாரணை அதிகார விஷயமாய் விவாதம் ஏற்படுவதை விலக்கியிருக்கிறது.

எந்த விஷயங்களைக்குறித்து 199-வது பிரிவின்படி கவர்ன்மெண்டார் விதிகள் செய்யலாமோ அவைகளுடனும், 202-வது பிரிவின்படி டிஸ்ட்ரிக்ட் போர்டார் சகாயச் சட்டங்கள் செய்யக்கூடுமோ அவைகளுடனும் சில புதிய அம்சங்களைச் சேர்த்திருக்கிறது. அவைகளில மிகவும் முக்கியமானது எதுவென்றால், வெவ்வேறு வகையான போர்டுகளுக்கும் அவைகளின ப்ரெஸிடென்டுகளுக்குமுள்ள சம்பந்தங்களைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக விதிகள் செய்வதேயாகும்.

யாதொரு லோகல் போர்டுக்கும் வேறே யாதொரு பிரதேச அதிகார சபைக்கும் சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படியானாலுஞ்சரி வேறே யாதொரு ஆக்டின்படியானாலுஞ்சரி ஏற்படக்கூடிய விவாதத்தைப் பைசல் பண்ணுவது சாத்தியமாகும்படிச்செய்யும் நோக்கத்துடன் 234-வது பிரிவு விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஷை விவாதத்தைப்பற்றி பிரதேச கவர்ன்மெண்டார் விசாரித்து அதை அவர்களே தீர்மானஞ்செய்யவோ, அல்லது மத்தியஸ்தர்கள் அல்லது கூட்டுக்கம்மிட்டிகளின் தீர்மானத்துக்கு அதை அனுப்பவோ அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

இப்போதிருக்கும் தாலூகா போர்டுகளைப் பிரிக்கவேண்டுமென்றும் லோகல் போர்டுகள் விசாரணை அதிகாரம் செலுத்தும் பிரதேசங்களையும் அவைகளிலிருக்கும் மெம்பர்களின் மொத்த சங்கியையையும் மாற்றவேண்டுமென்றும், குறித்த எலெக்டொரல் ஸர்க்கில்கள் யாதொரு தாலூகா போர்டுக்குத் தெரிந்தெடுத்து அனுப்பக்கூடிய மெம்பர்களின் சங்கியையை மாற்றவேண்டுமென்றும் அடிக்கடி பிரேரேபணைகள் செய்து அனுப்பப்படுகின்றன. அப்படிப்பட்ட விஷயங்களில், டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் தாலூகா போர்டுகள் ஆகிய இவைகளின் விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கும் யூனியன் போர்டுகளின் விஷயத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கும் புதிதாய் நபர்களை நியமிக்கவும் காலிஸ்தானங்களை நேமக மூலமாய்ப் பூர்த்தி செய்யவும் அதிகாரம் இருப்பது அவசியமாகும். 240-வது பிரிவைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவில் இது விஷயமாய் நிபந்தனை கண்டிருக்கிறது.

இன்னும் அனேக மாறுதல்களைச் செய்யவும் சந்தர்ப்பம் வாய்க்கவே அந்தப்படியே செய்திருக்கிறது. அவைகளைக்குறித்து இந்த இடத்தில் பிரத்தியேகமாய்ச் சொல்லவேண்டிய அவசியமில்லை. செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தங்களின் நோக்கம் இன்னதென்று அவைகளிலிருந்தே விளங்கும்.

பகுதிகளைப்பற்றிய குறிப்புகள்.

பகுதி 2.—கம்பெனி என்பதற்குச் சொல்லியிருக்கும் அர்த்தம் குறைவாயிருப்பதால், அனேக அன்னிய நாட்டுக் கம்பெனிகள் கம்பெனி வரி செலுத்தாமலே தப்பித்துக்கொண்டு வந்திருக்கின்றன. இப்போது சொல்லியிருக்கும் அர்த்தம் 1922-ம் ௵த்திய இந்து தேசத்து வருமான வரி ஆக்டிலிருந்து எடுக்கப்பட்டது. டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதற்கு ரெவினியு தாலூகாவே பரிமாண அளவாகும். ஆகவே, ரெவினியு தாலூகா என்பதற்கு இப்போது அர்த்தம் எழுதிச் சேர்த்திருக்கிறது.

பகுதி 3.—உத்தியோக முறைமையில் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளில் மெம்பர்களாயிருப்பவர்கள் 55-வது பிரிவின்படியாவது 56-வது பிரிவின்படியாவது யோக்கியதையற்றவர்களாய்ப் போய்விட்டால், 8-வது பிரிவை அனுசரித்து அவர்கள் பின்னும் போர்டில் மெம்பர்களாயிருக்கக்கூடுமா என்பதைப்பற்றி பிரசினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த விலக்கு நிபந்தனையினால் பிரஸ்தாப பிரசினை தீர்மானமாகிறது.

பகுதி 4.—யாதொரு தாலூகா போர்டார் வாஸ்தவத்தில் இத்தனை ஸ்தானங்களுக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பலாமென்பதைக் கணக்கிடுவதிலுள்ள சிக்கல்கள் இந்தப் பகுதியினால் நீங்கிப்போகின்றன.

பகுதி 5.—இதன் நோக்கம் அதிலிருந்தே விளங்கும்.

பகுதி 6.—யாதொரு ராஜிநாமா இன்ன தேதியிலிருந்து செலாவணியாகுமென்பது இப்போது ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறதில்லை. இந்தப் பகுதியினால் அது ஸ்பஷ்டமாய் ஏற்பட்டுவிடும்.

பகுதிகள் 7, 8.—வைஸ் ப்ரெஸிடென்ட் ஒருவர் இருந்தும் ப்ரெஸிடென்டின் அலுவல்களைப் பார்க்க அவர் சக்தியற்றவராயிருக்கும்பட்சத்தில், வேலையை நடத்துவதற்காக ஏற்பாடு செய்வதே இந்தப் பகுதிகளின் நோக்கமாகும்.

பகுதி 9.—இப்போது (i) ஸ்தாபனங்களை நிர்வாகஞ் செய்வதற்காகவும் அவைகளை மேற்பார்வையிடுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட கம்மிட்டிகளுக்கும் (ii) நிலையான கம்மிட்டிகளுக்கும் பேதம் ஏற்படுத்தி, நிலையான கம்மிட்டிகளுக்கு மாத்திரமே அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கலாமென்று நிபந்தனை கண்டிருக்கிறது. மேலும், நிலையான கம்மிட்டிகளில் இப்போது வெளி நபர்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. இந்த வித்தியாசங்கள் அனாவசியமாகும். தொந்தரவில்லாமல் பரிபாலனம் நடத்தப்படுவது சுலபமாயிருக்கும்படிச் செய்யும்பொருட்டு அவை நீக்கிவிடப்படுகின்றன.

பகுதி 10.—சாதாரண சந்தர்ப்பங்களில் யாதொரு கம்மிட்டியிலுள்ள வெளி நபர்களின் சங்கியையானது அந்த கம்மிட்டி மெம்பர்களின் மொத்த சங்கியையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகப்படக்கூடாதாயினும், நிபுணர்களின் ஆலோசனை உபயோகமாயிருக்கக்கூடிய சில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்த சங்கியாபரிமாணத்தை மீறுவது உசிதமாயிருக்கலாம். ஆனபோதிலும், கவர்ன்மெண்டாரின் அனுமதிபெறவேண்டுமென்னும் பாதுகாப்பு ஏற்படுத்துவது அவசியமாகும்.

பகுதி 11.—சுங்க வரும்படியை இன்னபடி பங்கிட்டுக்கொள்ளவேண்டுமென்று நிச்சயிப்பதைப்போன்ற யாதொரு வேலைக்காகவல்லாமல் வேறெதற்காகவாகிலும் யாதொரு கூட்டுக்கம்மிட்டி ஏற்படுத்தப்படலாமாவென்பது இப்போது சந்தேகமாயிருக்கிறது. இந்த சந்தேகத்தை இப்போது நிவர்த்திசெய்திருப்பதுமல்லாமல், கூட்டுக்கம்மிட்டிகளை ஏற்படுத்தவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்கான அதிகாரமும் பிரதேச கவர்ன்மெண்டாரிடம் விட்டுவைக்கப்பட்டிருக்கிறது. வெளி நபர்களைக் கூட்டுக்கம்மிட்டிகளில் சேர்த்துக் கொள்வதற்காகவும் அந்தக் கம்மிட்டிகளுக்காக ரெகுலேஷன்கள் ஏற்படுத்துவதற்காகவும் நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதி 12.—சபைகளில் ஒழுங்கு குலையாதபடி அக்கிராசனாதிபதிகள் பார்த்துக்கொள்வது சாத்தியமாவதற்கு (b) குறிப்பிட்ட உட்பகுதி அவசியமாயிருக்கிறது. (c), (d) குறிப்பிட்ட உட்பகுதிகளோ, கம்மிட்டிகள் பெருக்கு மாத்திரம் ஏற்பட்டிராமல் கிரமமாயும் முறைப்படியும் வேலை செய்யவேண்டுமானால் அவை அவசியமாகும்.

பகுதி 13.—இப்போதிருக்கிறபடி சட்டமானது - 56-வது பிரிவின்படி யோக்கியதையற்றவர்களாய்விட்ட நபர்களின் விஷயங்களுக்காவது, வாஸ்தவத்தில் உத்தியோகம் வகிப்பதனின்றும் நின்றுபோயும் லோகல் போர்டின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும் நபர்களின் விஷயங்களுக்காவது பிரயோகப்படுகிறதில்லை. இந்தத் திருத்தத்தினால் அது அப்படிப்பட்ட விஷயங்களுக்கும் பிரயோகப்படும்.

பகுதி 14.—யாதொரு டிஸ்ட்ரிக்டிலுள்ள பிரதேச சபைகள் தனித்தனி ரிபோர்ட்டுகள் அனுப்பினால், அவைகளை ஒன்றாய்ச் சேர்ப்பதில் விசேஷ கஷ்டம் ஏற்படுகிறது. மேலும், மொத்தமாய் ஜில்லாவின் பரிபாலனத்தைப்பற்றி ஸ்பஷ்டமாயும் விவரமாயும் சங்கதி தெரிவது கஷ்டமாயிருக்கிறது. இதை இப்போது விலக்கியிருக்கிறது.

பகுதிகள் 15, 16, 17.—இந்தப் பகுதிகள் மூலமாக, டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு நேராக மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தெரிந்தெடுக்கப்படும் ஸ்தானங்களின் சங்கியையில் மாறுதல் ஏற்படும்போதெல்லாம் அந்த ஸ்தானங்களை மீண்டும் பங்கீடு செய்வதற்கு ஒவ்வொரு விஷத்திலும் விலக்கு நிபந்தனை அவசியமாகும்.

பகுதிகள் 18, 19.—இந்தப் பகுதிகளின் நோக்கம் அவைகளிலிருந்தே விளங்கும்.

பகுதி 20.—பப்ளிக் ப்ராஸிக்யூடர், அபிஷல் ரிஸீவர் முதலியவர்கள் உத்தியோகஸ்தரா அல்லவா என்பதைப்பற்றி அடிக்கடி பிரசினைகள் ஏற்படுகிறபடியால், இன்னார் கவர்ன்மென்டாரிடம் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தராகக் கருதப்படவேண்டுமென்று நிச்சயிப்பதற்கு அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 21.—யாதொரு லோகல் போர்டின் கன்ட்ராக்டர் அந்த லோகல் போர்டிலாவது டிஸ்ட்ரிக்டிலுள்ள வேறே யாதொரு லோகல் போர்டிலாவது மெம்பராயிருப்பதைத் தடுப்பதற்காக, கன்ட்ராக்டுகளில் அக்கறையுடையவர்களாயிருப்பது விஷயமாய் ஏற்படும் யோக்கியதைக்குறைவை விரிவாக்கியிருக்கிறது. ஹானரரி மாஜிஸ்ட்ரேட்டுகள் தங்கள் உத்தியோகங்களை ராஜிநாமாசெய்து அந்த ராஜிநாமாவானது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டிடம் வந்து சேர்ந்திருக்கிற பட்சத்திலே, தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன்வர அவர்களுக்கு அனுமதிகொடுத்திருக்கிறது. ஆயினும், மாஜிஸ்ட்ரேட்டுக்குரிய அதிகாரங்கள் எலெக்ஷன் தேதிக்குமுன் எடுத்துவிடப்படாதிருக்கும்பட்சத்தில், பிரஸ்தாப யோக்கியதைக் குறைவு இருப்பதாகவே கருதப்படும்.

பகுதி 22.—(c) **அடையாளமிட்ட உட்பகுதி.**—லோகல் போர்டுகள் இரண்டு மாதத்துக்கு ஒரு முறை சபைகூடலாமென்று அனுமதி கொடுத்து 2-வது ஷெட்யூலில் செய்திருக்கும் திருத்தத்தின் காரணமாக இந்த உட்பகுதி ஏற்பட்டதாகும்.

(d) **அடையாளமிட்ட உட்பகுதி.**—லோகல் போர்டின் சபைகளுக்கு வராமல் நின்றுபோகும் மெம்பர்களை மறுபடியும் மெம்பர் உத்தியோகத்தில் வைத்துக்கொள்வதற்குச் சம்பந்தப்பட்ட நடவடிக்கைமுறை ஸ்பஷ்டமாய் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், அந்தப்படி மறுபடியும் மெம்பர் உத்தியோகத்தில் வைத்துக்கொள்வதற்குவேண்டிய பிரதம எத்தனங்களை லோகல் போர்டின் சபைகளுக்கு வரத்தவறிப்போன மெம்பரே செய்யவேண்டுமென்று நிபந்தனை கண்டிருக்கிறது.

(e) **அடையாளமிட்ட உட்பகுதி.**—நேராய்த் தெரிந்தெடுக்கும் முறை சித்திகரமாயிருக்கவேண்டுமானால், இந்த உட்பகுதி அவசியமாகும்.

பகுதி 23.—சில வகுப்புகளைச் சேர்ந்த பாட்டைகள் விஷயமாய் இப்போது இருதிறத்தார் மேல்விசாரணை புரிந்து வருகிறார்கள். இந்தப் பகுதியினால் அந்தப்படி இருதிறத்தார் மேல்விசாரணை புரிவது நின்றுபோகும். லோகல் போர்டுகள் எந்த வகுப்பைச் சேர்ந்த பாட்டைகளைப் பராமரித்து வரவேண்டுமோ அவைகளின் விஷயமாய் அந்த போர்டுகளுக்குள்ள உத்தரவாதத்தை வரையறுத்துக்காட்டும் பொருட்டு, ‘தாலூகா பாட்டைகள்’ என்று ஒரு புதிய வகுப்பு அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பகுதி 24.—லோகல் போர்டார் வேலையில் அமர்த்திக்கொள்ளும் சிப்பந்திகளின் சங்கியையையாவது அவர்களுடைய சம்பளத்திட்டத்தையாவது புனராலோசனைசெய்து திருத்துவதில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறையை சுலபமாக்கியிருக்கிறது. மேலும், ப்ரெஸிடென்ட் கேட்டுக்கொள்வதன்மேலேயே அப்படிப்பட்ட பிரேரேபணைகளைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறது.

பகுதி 25.—68-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் அறுதியான தடையை அனுசரித்து வாஸ்தவத்தில் வேலை செய்ய முடியவில்லை. ஆகவே, மிகவும் அவசியமாயிருக்கும்போது, டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் அனுமதியைப் பெற்று வெளி வேலையைப் பார்க்க டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸருக்கும் டிஸ்ட்ரிக்ட் என்ஜினீருக்கும் உத்தரவு கொடுக்க உத்தேசித்திருக்கிறது.

பகுதி 26.—இது 24-வது பகுதியின் காரணமாக ஏற்பட்டதாகும்.

பகுதி 27.—எந்த பாபத்துகளின் சம்பந்தமாய் டிஸ்ட்ரிக்ட் போர்டார் ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாமோ அந்த பாபத்துகளுடன் ‘பிரயாண வர்த்தனைகளும்’ சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பகுதி 28.—ஒரு முறை நிஷ்கரிஷை செய்யப்பட்ட வரி வீதங்கள் விஷயமாய் ஒரு விதமான முடிவு ஏற்படவேண்டும். ஆகவே, அதம கால அளவு ஒரு வருஷமாக நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறது. எலெக்ஷன் காரியங்களுக்காக வரிவிஷயமாய் மோசம் நடப்பது விரும்பக்கூடியதல்ல. அந்தப்படி மோசம் நடப்பதும் இந்தப் பகுதியினால் குறையும்.

பகுதி 29.—1921-௵ ஸிம்லாவில் நடந்த ரெயில்வே மகாநாட்டில் செய்யப்பட்ட சிபாரிசை அனுசரித்து, யாதொரு யாத்திரை ஸ்தலத்தை விட்டு வெளியே போகும் யாத்திரைக்காரர்களுக்கு மாத்திரமே யாத்திரைக்காரர்களின் வரி செலுத்தும் பொறுப்பு ஏற்படுத்தியிருக்கிறது. இதனால், அந்த வரியை வசூலித்து சரிக்கட்டுவது மிகவும் சுலபமாகும். எப்படியென்றால் யாத்திரை ஸ்தலத்திலாவது அதற்கு சமீபத்திலாவது மாத்திரமே அது விதிக்கப்படும். விலக்கு நிபந்தனையில் செய்திருக்கும் மாறுதலின் நோக்கம் அதிலிருந்தே விளங்கும்.

பகுதி 30.—தொகை செலுத்தப்பட்டிருக்கும் மூலதனத்தை வரிவிதிப்பதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளாமல், ‘மொத்த வியாபார மதிப்பை’ அதற்கு ஆதாரமாய்க் கொள்ளும்படி மாற்றியிருக்கிறது. இனிமேல் ஒவ்வொரு பிரதேச விஸ்தீர்ணத்திலுமுள்ள ஒவ்வொரு கம்பெனிக்கும் அந்தப் பிரதேசத்தில் அதனுடைய மொத்த வியாபார மதிப்பை அனுசரித்து வரி விதிக்கப்படும். ப்ரான்சுகள் (கிளைகள்), ஏஜென்ஸிகள் முதலியவைகள் விஷயமாய் ஏற்படும் கஷ்டங்கள் இனிமேல் ஏற்படமாட்டா. விதிக்கப்படத்தக்க வரியின்

உச்ச தொகை இவ்வளவென்பதையும் கம்பெனிகளை வெவ்வேறு வகுப்புகளாகப் பிரித்திருப்பதையும் விட்டுவிட்டிருக்கிறது. சொற்ப வியாபார மதிப்புடைய கம்பெனிகளை விவாரணை செய்வதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 31.—வர்த்தகத்தையும் பணம் கடன் கொடுப்பதையுங்குறித்துச் சொல்லியிருக்கும் விஷயங்களை விட்டுவிட்டிருப்பதுமல்லாமல், பிரதேச விஸ்தீர்ணத்துக்கு வெளியே யிருக்கும் வீடுகளிலிருந்தும் நிலங்களிலிருந்தும் கிடைக்கும் வரும்படியை வரி விதிப்பதினின்றும் விலக்கியும் இருக்கிறது. யாதொரு லோகல் போர்டார் கம்பெனி வரி விதிக்காவிட்டால், சகல கம்பெனிகளும் தொழில் வரி செலுத்துவதற்கு உட்பட்டவையாகுமென்பதையும், இவ்விரண்டு வரிகளும் விதிக்கப்பட்டால், கம்பெனி வரி விதிக்கப்பட்டிராத கம்பெனிகள் தொழில் வரி செலுத்துவதற்கு உட்பட்டவையாகுமென்பதையும் ஸ்பஷ்டமாக்கியிருக்கிறது.

பகுதி 32.—நோடிஸ் பிறப்பிப்பதற்கு மாத்திரம் 96-வது பிரிவு சம்பந்தப்பட்டதாயிருக்கும்படி அதைச் சுலபமாக்கியிருக்கிறது. இன்னபடியானால் கம்பெனி வரி அல்லது தொழில் வரிக்குள்ளாகவேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லும் மேற்படி பிரிவின் பாகங்கள்-92-வது, 93-வது பிரிவுகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பகுதி 33.—வீடுகளுக்கு விதிக்கப்படும் வரியானது அரைவருஷ வரியாகுமென்று இந்தப் பகுதியில் ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறது.

பகுதி 34.—இந்தப் பகுதியின் உத்தேசம் அதிலிருந்தே விளங்கும்.

பகுதிகள் 35, 36.—சுங்கவாயில்களின் சங்கியை விஷயமாயும் அவைகள் அமைக்கப்படவேண்டிய இடங்கள் விஷயமாயும் ஒழுங்கேற்படுத்துவதற்காக பொதுவான திட்டங்களோ பிரத்தியேகமான விஷயங்களில் உத்தரவுகளோ கவர்ன்மெண்டார் பிறப்பிக்கும் அதிகாரம் அவர்களிடமே இருக்கும்படி செய்வது அவசியமாகுமென்று அனுபவத்தில் தெரிய வந்திருக்கிறது. கவர்ன்மெண்டாருடைய அனுமதியுடனன்றி மற்றப்படி, 24 மணி நேரத்தில் 20 மைல் தூரத்துக்குள்ளே ஒரு முறைக்கு அதிகமாய் சுங்கம் வசூலிப்பது விரும்பக்கூடியதுமல்ல.

பகுதி 37.—இந்தியா கவர்ன்மெண்டாரால் எடுத்துக்காட்டப்பட்ட குறைகள் நீங்கும்படியாக இந்தப் பிரிவை திருத்தியெழுதியிருக்கிறது. பல வருஷங்களுக்கு ஒரு முறை வருகிற உற்சவங்களின் விஷயத்தில் யாத்திரைக்காரர்களுக்கு வரி விதிப்பதற்காக நிபந்தனை கண்டிருக்கிறது. அப்படிப்பட்ட விஷயங்களில் ஒவ்வொரு சமயத்திலும் இந்த வரியானது வரையறுக்கப்பட்ட கால அளவுகளுக்கு விதிக்கப்படும். ஆயினும், அடிக்கடி யாத்திரை செய்யப்படுகிற விஷயத்தில், வருஷமுழுவதும் வரி விதிக்கலாம். "ஒவ்வொரு தடவையும் யாத்திரை போவதற்குமுன்" என்னும் வார்த்தைகளை "ஒவ்வொரு தடவையும் யாத்திரை போவது விஷயமாகவும்" என்று மாற்றியிருக்கிறது. திருத்தியெழுதப்பட்டிருக்கும் பிரிவின்படி, வரியை விதிப்பதற்கு இந்தியா கவர்ன்மெண்டாரின் அனுமதி பெறப்படும்; மேலும், வரி விதிப்பதற்கு ஒருமுறை அனுமதி கொடுக்கப்பட்டால், இன்ன சந்தர்ப்பத்திலும் இன்ன கால அளவுக்கும் வரி விதிக்கவேண்டுமென்பதைப்போன்ற இதர விவரங்களைப் பிரதேச சபையார்-சம்பந்தப்பட்ட ரெயில்வே பரிபாலகர்களுடன் கலந்து ஆலோசித்தும் பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தைப் பெற்றும் நிச்சயிப்பார்கள்.

பகுதி 38.—பிரதிபலன் தரக்கூடிய முயற்சிகளில் லோகல் போர்டார் தலையிட்டுக்கொள்வது விஷயமாய ஒழுங்கேற்படுத்துவது இந்தப் பகுதியின் நோக்கமாகும்.

பகுதி 39.—வசூலிக்கமுடியாத பாபத்துகளைக் கணக்கிலிருந்து அடித்துவிட லோகல் போர்டுகளுக்கு அதிகாரம் ஏற்படுத்துவது அவசியமாகும்.

பகுதி 40.—இது - ஹிந்து மதசம்பந்தமான இனங்களைக் குறித்த மசோதா ஆக்டை அனுசரித்து எழுதப்பட்டிருக்கிறது. யாத்திரை ஸ்தலமானது பிரதேச விஸ்தீர்ணத்துக்கு வெளியேயிருந்தாலும், அந்த ஸ்தலத்துக்குப் போகும் யாத்திரைக்காரர்களுக்காக வழியில் ஏற்பாடுகள் செய்யவேண்டியதாயிருக்கும் பட்சத்தில், சகாயத்தொகை விதித்து வாங்குவதற்கு நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 41.—பிரஸ்தாப பிரிவின் நோக்கம் இன்னதென்று இதனால் தெளிவாய் ஏற்படும்.

பகுதி 42.—இதற்குக் காரணம் வெளிப்படையாயிருக்கிறது. நோடிஸ் மாத்திரம் பிறப்பிப்பதற்கு லோகல் போர்டாரின் அனுமதி அவசியமில்லை.

பகுதி 43.—இதன் நோக்கம் இந்தப் பகுதியிலிருந்தே விளங்கும்.

பகுதி 44.—இதனால், இந்தப் பிரிவின் சொல்லமைப்பு இப்போதிருப்பதைக்காட்டிலும் தெளிவாயிருக்கும்.

பகுதி 45.—கட்டணங்கள் விதித்து வாங்குவதற்கு அனுமதிகொடுக்கப்படுகிற சொந்த மார்க்கெட்டுகளுக்கு லைஸென்ஸுகள் விஷயமாய்க் கட்டணம் வசூலிக்கப்படுமென்று நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமாகும்.

பகுதி 46.—இதன் நோக்கம் இந்தப் பகுதியிலிருந்தே விளங்கும்.

பகுதிகள் 47, 48.—மியுனிஸிபல் எல்லைகளுக்கு மூன்று மைலில் தூரத்துக்குள் இருக்கிற விஸ்தீர்ணத்தின் விஷயத்தில் இருதிறத்தார் மேல்விசாரணை புரிவது இந்தப் பகுதியினால் அவசியமிராமற் போகும்

பகுதி 49.—இந்தப் பகுதியின் மூலமாகச் சேர்த்திருக்கும் முக்கியமான நிபந்தனை என்னவென்றால், பற்பல லோகல் போர்டுகளுக்கும் சம அதிகாரம் எற்படும்படிச் செய்வதும் அவைகளை மேல்விசாரணை புரிவதும் சாத்தியமாகும்படிச் செய்யும் நோக்கத்துடன் அவைகளுக்குள் எற்படும் பரஸ்பர சம்பந்தங்கள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காக விதிகள் செய்ய கவர்ன்மென்டாருக்கு அதிகாரம் கொடுப்பதேயாகும்.

பகுதி 50.—இந்தப் பகுதியில் கண்டிருப்பது ஒரு அவசியமான நிபந்தனையாகும். அது இப்போது சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது - 168-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (e) அடையாளமிட்ட பகுதிக்கு உடன் சேர்க்கையானதாகும்.

பகுதி 51.—இன்ன சகாயச் சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவென்று பொது ஜனங்களுக்குத் தெரியவேண்டியது அவசியமாகும். மேலும், செய்ய உத்தேசிக்கப்பட்டபடியிருக்கும் சகாயச் சட்டத்தைவிட முடிவாய் ஊர்ஜிதம் செய்யப்பட்டபடிக்குள்ள சகாயச் சட்டமே முக்கியமாய் பிரசுரிக்கப்படவேண்டியதாகும்.

பகுதி 52.—லைசென்ஸுகளுக்காகக் கட்டண வீதங்களை நிஷ்கரிஷை செய்வதுடன், இன்ன பரிமாணங்களுக்கு கட்டணங்கள் விதிக்கப்படவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்ய லோகல் போர்டுகளுக்கு அதிகாரம் இருப்பதும் அவசியமாகும்.

பகுதி 53.—கவர்ன்மெண்ட் விளம்பரங்கள் சுதேச பாஷைகளில் டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டுகளிலே பிரசுரிக்கப்பட்டாகிறவரையில் அவை செலாவணியாவதை நிறுத்தி வைப்பதாயிருந்தால், அனுவசியமாய்க் கால தாமதம் எற்படும்.

பகுதி 54.—பிரதேச வரிகளையாவது பாக்கிகளையாவது செலுத்தத் தவறிப்போனதற்காக விதிக்கப்படக்கூடிய அபராதத்தொகையுடன்கூட, வரிகளை வசூலிக்கும் விஷயத்தில் க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தில் கண்டிருக்கும் நிபந்தனைகளைப் பிரயோகிப்பதே இந்தப் பகுதியின் நோக்கமாகும்.

பகுதி 55.—இந்தப் பகுதியானது - இந்து மதசம்பந்தமான இனுங்களைக் குறித்த மசோதா ஆக்டிலுள்ள நிபந்தனையை அனுசரித்து எழுதப்பட்டிருக்கிறது.

பகுதி 56.—பிரதேச அதிகார சபைகளுக்குள் எற்படும் விவாதங்களை கவர்ன்மென்டார் தங்களுடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுவதன்மேலாவது தாஙகளாகவேயாவது பைசல் செய்ய அவர்களுக்கு இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிக அதிகாரம் எற்படுத்தப்பட்டிருக்கிறது. கவர்ன்மென்டாரே தீர்மானஞ் செய்யலாம், அல்லது பிரஸ்தாப விஷயத்தை யாதொரு மத்தியஸ்தரின் அல்லது சபையின் அல்லது கூட்டுக்கம்மிட்டியின் தீர்மானத்துக்கு அனுப்பலாம்.

பகுதி 57.—யாதொரு தாலூகா போர்டின் விசாரணை யதிகாரத்துக்குட்பட்ட விஸ்தீர்ணம் மாற்றப்படும்போதெல்லாம், அப்போதிருக்கும் நிலைமைக்கு எவ்வளவு குறைவாய் பாதகம் உண்டாகும்படி செய்யக்கூடுமோ அவ்வளவு குறைவாய் பாதகம் உண்டாகும்படி செய்வது கவர்ன்மென்டாருக்கு சாத்தியமாயிருக்கும் பொருட்டே இந்தப் பகுதி அமைத்துக்கொள்ளப்பட்டது

பகுதி 58.—இந்தப் பகுதி - டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு மெம்பர்களைப் பொது ஜனங்கள் நேராய்த் தெரிந்தெடுக்கும் முறையை அனுசரிக்கும்படிச் செய்வதனல் எற்பட்டதாகும்.

பகுதி 59.—இதில் செய்யப்பட்டிருக்கும் பிரதான மாறுதல்கள்—

(i) திருத்திச் செய்யும் மாறுதல்கள் பின்னோக்காய்ச் செலாவணியாவது விஷயமாய் நிர்ப்பந்தம் எற்படுத்துவதற்கும்,

(ii) இன்ன ஆதாரத்தைக் கொண்டு கம்பெனி வரி விதிக்கவேண்டுமென்பதற்கும்,

(iii) தொழில் வரி வீதநிர்ணயத்தை மறுபடியும் படிப்படியாய் பிரிப்பதற்கும்,

சம்பந்தப்பட்டவையாகும்.

பகுதி 60.—இதிற்கண்ட மாறுதல்கள் 23-வது பகுதியின் காரணமாய் எற்பட்டவையாகும்.

பகுதி 61.—டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் விஷயத்தில் மெம்பர்களைப் பொது ஜனங்கள் நேராய்த் தெரிந்தெடுக்கும் முறையைப் படிப்படியாய் அனுசரிக்கும்படிச் செய்வதற்கு இது அவசியமாகும்.

1923-ம் ௵ ஜனவரி ௴ 22௳. பி. ராமராயநிங்கர்.

பி. எல். மூர்,
கவர்ன்மென்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மென்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.